
ஒரு
அவளும்
'பண்ணையில்'
டாக்டர்

# அவனும்

# அவளும்

# அவையும்

கவிதைத் தொகுப்பு

பாட்டும் பயனும்

"பண்ணைமூலை"

டாக்டர் ந. சுப்பிரமணியம்

சாயிராம் வெளியீடு
1975

முதற்பதிப்பு : வைகாசி 1975

# AVANUM AVALUM AVAIYUM

(A COLLECTION OF POEMS)

*by*

"PANNAIMOOLAI"

**DR. N. SUBRAMANIAM**

SITHANKERNY, SRI LANKA.

பதிப்புரிமை :

**திருமதி நாகலிங்கம் மாரிமுத்து**

பண்ணைமூலை, சித்தன்கேணி,

இலங்கை.

தொடர்புகளுக்கு :

டாக்டர் ந சுப்பிரமணியம்

சித்தன்கேணி, இலங்கை.

என் பெரியதாயாருஞ்
சித்தன்கேணியிற் சீவித்துச் சிவபதமடைந்தவருமாகிய

# திருமதி சிவகாமிப்பிள்ளை நமசிவாயம்

அவர்களுக்கு

இக் கவிதைத் தொகுப்புச்

# சமர்ப்பணம்



வெண்பா

சீராட்டித் தாலாட்டிச் சீராய் எனைவளர்த்த
பேரார் சிவகாமிப் பிள்ளைக்கு - நேரான
சின்னமென இந்நூல் சிறக்கக் கணபதியே
உன்னருளைத் தாராய் உவந்து.

# நூன்முகம்

எனது பதினாறும் வயதிலிருந்து இருபதாம் வயதுவரை (அதாவது 1954ம் ஆண்டின் முன்னர்) நானெழுதிய கவிதை களுட் சிலவற்றைத் தொகுத்து, நூலுருவில் உங்கள் முன் வைக்கின்றேன். பழமையுடன் புதுமையையுங் கலக்க விரும்பி, நான் 1973ம் ஆண்டின் பின்னர் எழுதிய ''நல்லூர்க் கந்தன், கண்ணன், இயேசுநாதர்'' பற்றிய கீர்த்தனைகளையும் ''ஸ்ரீ சத்ய சாயிபாபா திருவாய் மொழிகள்,'' ''மேனாட்டு நடனக்காரி'' என் னுங் கவிதைகளையும் இந் நூலுட் புகுத்தியுள்ளேன்.

பழைய கவிதைகளுட் பல, முற்காலத்துப் பிரபல ஆங்கில—தமிழ் எழுத்தாளரின் படைப்புக்களைத் தழுவி எழுதப்பட்டவை யாகும். என்னைக் கவர்ந்த கம்பன், வள்ளுவன், வில்லிபுத் தூரர், பாரதி, குமாரசுவாமிப்புலவர், சோமசுந்தரப்புலவர், பேரா சிரியர் அ. சீநிவாசராகவன், ஸ்கொற், ஷெல்லி, ஷேர்ளி, பூடி லோன், ட்றேயிரன் ஆகியோரின் கருத்துக்கள் இக் கவிதை களுட் பளிச்சிடுகின்றன. இஃது இளமையில் எனக்கிருந்த ஆங் கில—தமிழ் இலக்கிய இரசனையின் பிரதிபலிப்பென்றே எண்ணு கின்றேன்.

இக் கவிதைகளுட் பல, யாழ்ப்பாணக் கல்லூரியின் ''இள ஞாயிறு,'' இலங்கைப் பல்கலைக் கழகத்தின் 'இளந் தென்றல்,' யாழ். அரசினர் வைத்தியசாலையின் ''வண்டு,'' சிரித்திரனின் ''கண்மணி'' முதலிய சஞ்சிகைகளிலும்; ''ஈழநாடு,'' ''தின கரன்'' முதலிய தினசரிகளிலும் வெளிவந்தவை. எஞ்சியவை, இசைக் கச்சேரிகளிலும், கவியரங்குகளிலும், பேச்சரங்குகளிலும், இலங்கை வானொலியிலும் ஒலித்தவை.

இந்நூலை, எவருக்கும் இலகுவில் விளங்கவைக்க எண்ணிக் கவிதைகளுட் பல குறியீடுகளைப் புகுத்தியுள்ளேன், அத்துடன் பயன்களையும் எழுதியுள்ளேன் இக் கவிதைகளும், கீர்த்தனை களும் தமிழ்ப்பேசும்-தமிழ்வாசிக்கும் மக்களுக்கு (முக்கியமாக இளஞ் சிறுவர்க்கு) உவகையளிக்குமென நம்புகின்றேன்.

இந்தக் கவிதைத் தொகுப்பைப் பரிசோதித்து வெளியிட உதவிய வித்துவான் பொன். முத்துக்குமாரன் B. O .L. அவர்களுக்கும், சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்களுக்கும்; இந்நூலை வெளியிட ஊக்குவித்த வர்த்தகப் பெருமக்கள், நண்பர், யாழ். அரசினர் வைத்தியசாலை ஊழியர் - நோயாளர் அனைவருக்கும்; இதனை அழகுற அச்சேற்றிய கண்ணன் அச்சகத்தினர்க்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். மேலும், உதவிகள் பல புரிந்து, என்னை உற்சாகப் படுத்திய திரு. க. கனகராசா J. P. *(மில்க் வைற்)*, டாக்டர் ஆ. சிவபாலசுந்தரம், திரு. பாமா ராஜகோபால், திரு. கு. விவேகானந்தன், திரு. என். செல்வநாதன் *(ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்)*, திரு. வெ. யோகீஸ்வரன் J. P. *(யோகா கபே)* ஆகியோரையும் என் உள்ளம் என்றும் மறக்காது.

வாசக நேயர்களே ! கவிதைப் பூங்காவினுட் புகுந்து, பாடல்களைச் சுவையுங்கள்.

வணக்கம்.


டாக்டர் ந. சுப்பிரமணியம்

*மூளை, நரம்பு சத்திர சிகிச்சைக் கூறு*

*அரசினர் வைத்தியசாலை*

*யாழ்ப்பாணம், இலங்கை.*


*வைகாசி 1975*



# பொருளடக்கம்


## அவனும் அவளும்

| | பக்கம் |
|---|---|
| காதலோ காதல் | 7 |
| ஆலனின் காதல் | 12 |
| தாயுஞ் சேயும் | 16 |

## அவள்

| | |
|---|---|
| கிளிவிடு தூது | 17 |
| கனவில் வந்த கன்னி | 20 |
| மேனாட்டு நடனக்காரி | 22 |
| பரத நாட்டியப் பாவை | 22 |
| திவ்விய தீந்தமிழ்த் தாய் | 23 |

## அவளும் அவையும்

| | |
|---|---|
| இசை | 25 |
| கற்பு | 26 |
| திருமணம் | 26 |

## அவன்

| | |
|---|---|
| திருக்கேதீச்சரன் | 27 |
| கதிர்காமக் கந்தா ! | 32 |
| ஞான வயிரவர் | 33 |

| | பக்கம் |
|---|---|
| நல்லூர்க் கந்தன் | 34 |
| கண்ணனின் காதல் | 36 |
| இயேசு அண்ணலே | 37 |
| புத்தர் பெருமான் | 37 |
| கவிஞன் | 38 |
| எழுத்தாளன் | 39 |
| டீ. கே. சி. | 40 |
| தேசாபிமானம் இல்லாதவன் | 42 |
| இயமன் — சமதர்மவாதி | 43 |


## அவனும் அவையும்

| | |
|---|---|
| நாமும் மெய்ப்பொருளும் | 45 |
| பாரதியுஞ் சமுதாயமும் | 48 |
| வள்ளுவனும் வானும் | 49 |
| கவிஞனுங் கவிதையும் | 50 |


## அவை

| | |
|---|---|
| காதலும் ஒளியும் | 53 |
| வெள்ளைப்பூனை | 54 |
| வானொலி | 55 |
| அணுவும் மதுவும் | 57 |
| இலட்சிய வாழ்க்கை | 60 |
| முகிலின் சுயசரிதை | 64 |
| புத்தரின் பொன்மொழிகள் | 67 |
| கிறீஸ்துவின் அறிவுரைகள் | 69 |
| இராமகிருஷ்ண பரமஹம்சரின் திருமொழி | 69 |
| ஸ்ரீ சத்ய சாயிபாபா திருவாய்மொழிகள் | 70 |
| மழை பொழிந்தது | 72 |
| கடற்கரை மாலைக்காட்சி | 74 |
| ஒரு காட்சி | 79 |
| அந்திமாலை | 80 |

# அவனும் அவளும்

## காதலோ காதல்!

வலிமை பொருந்திய கைகளும், மார்பும், தோள்களும் உள்ளவனும், அஞ்சா நெஞ்சம் படைத்தவனுமாகிய குபேரனின் மகனொருவன் ஒரூரில் வாழ்ந்து வந்தான். அவன் ஓர் அழகுமிக்க இழிகுலத்துப் பெண்ணைக் காதலித்தான். அவன் காதலிக்கின்றான் என்பதை அவள் முதலில் நம்பவில்லை. அவனுடைய காதல் உண்மையானது என அவள் அறிந்ததும், அவர்கள் கண்களாற் காதற் கதைகள் பேசத் தொடங்கினார்கள். இக் காதலை அறிந்த அவனுடைய பெற்றோர், அவனை வேறொரு நகரத்திற்கு வேலை செய்வதற்கு அனுப்பினார்கள்.

இருவர் உள்ளங்களிலும், காதல் பொங்கியது. பிரிவினால் மனவேதனை பெருகியது. இப்படியே ஆறு வருடங்கள் நூறு வருடங்கள் போலச் சென்றன. ஒரு நாள் அந்த நகரத்திலுள்ள பெண்களெல்லோரும் அழகாக உடுத்துக் கொண்டு உலாவச் சென்றனர். அந்நேரம், அவள் கிழிந்த துணிகளை அணிந்துகொண்டு, தனது காதலனின் நகரத்திற்குப் புறப்பட்டாள். வெப்பமான வீதிகளில் நடந்தமையாலும், பசி கொண்டமையாலும் உடலிளைத்துக் குளக் கரையிலுள்ள ஒரு மரத்தின் கீழ் உறங்கினாள்.

அப்பொழுது தனது காதலன் வருவதைக் கண்டாள். அவன் வந்துகொண்டிருந்த குதிரையை நிறுத்திப் பிச்சை தரும்படி கேட்டாள். அவளின் ஊரின் பெயரை அவன் விசாரித்தபொழுது, அவள் கூறினள். உடனே அவன், ''உனது ஊரிலே எனது காதலியிருக்கின்ருள்; அவளின் சுகமெப்படி?'' என்று கேட்டான். அவனுடைய உள்ளத்தைச் சோதிக்கும் எண்ணங்கொண்டு ''அப் பெண் இறந்துவிட்டாள்'' என்று அவள் உரைத்தாள்.

இதனைக் கேட்டதும், அவன் மனமுடைந்தான்; பைத்தியக்காரன் போலானுன்; பையிலுள்ள பணத்தை வீசினுன்; குளத்தில் வீழ்ந்து உயிரைவிட ஓடினுன். அப்பொழுது அவள் ''தலைவனே! உன் காதலி உன் அருகிலேயே நிற்கின்ருள்'' என அலறினுள். துன்பம் நீங்கியது. இன்பம் பிறந்தது. அவர்கள் மலரும் மணமுமெனவும், கடலும் அலையுமெனவும், நிலவும் ஒளியுமெனவும் நீடூழி வாழ்ந்தனர்.

இப்பொழுது இக் கதையில் உதித்த கவிதைப் பூங்காவினுள் நுழையுங்கள்....

விருத்தம்

வலிமைகொள் கரமும் மார்பும்
வரைநிகர் தோளும் வாய்ந்த
புலியெனச் செருவிற் கஞ்சாப்
புகழ்பெறுங் குபேரன் மைந்தன்,
நலிவுறு குலத்தில் வந்த
நங்கையாம் வனப்பில் மிக்காள்
வலையினில் மயங்கி வீழ்ந்து
வாடினுன் காத லாலே! (1)

இப்படிப் பெரியோன் மைந்தன்
　　இயற்றுவான் காத லென்னுந்
தப்பிலா அவளின் உள்ளஞ்
　　சாற்றவே யில்லை முன்னர்,
மெய்ப்பொரு ளறிந்த பின்னர்
　　மிளிரவும் அவளின் காதல்,
ஒப்பிலாக் கதைகள் கண்ணால்
　　உரைக்கவே தொடங்கி னாரே. (2)

ஈறிலாக் காத லென்றும்
　　இளைஞனின் உளத்தி னின்றும்
ஆறுபோற் பெருகல் தன்னை
　　அறிந்துள அவனின் பெற்றோர்,
மாறிடா அவனுள் ளத்தை
　　மாற்றவே அனுப்பி வைத்தார்
வேறொரு நகரத் திற்கு
　　வேலையில் அமரு தற்கே. (3)

ஏதுமில் காதல் கொண்ட
　　இருவரின் உளங்கள் தம்மிற்
சாதலோ என்று மின்றித்
　　துடிப்பருங் காதல் பொங்க,
வேதனை பிரிவால் விஞ்ச
　　வேகமில் வருடம் ஆறு
நூதன மாக ஆண்டு
　　நூறுபோற் சென்ற தன்றே! (4)

வேறு

இந்நகரில் வசித்திடும்நல் லிளம்பெண் யாரும்
இளைஞரின்மேற கண்வலைகள் எறியும் வண்ணம்
பொன்னுடை தரித்தொருநாட் புட்கள் போலப்
புகழுடனே தெருவதனிற் பொலிவோ டேக,
இந்நங்கை காதலனின் இடத்தை நாடி
இன்னியதன் ஆடைதனை எறிந்து விட்டுப்
பொன்னரிய மேனியிலே பொத்தற் கந்தை
புனைந்துதன்கா தலன்நகரம் புறப்பட் டாளே. (5)

திக்கெங்குங் கனலுமிழுந் தெருக்கள் தம்மிற்
திருநகரஞ் சேர்ந்தவுடன் திரிந்து சென்று,
மிக்கபசி கொண்டதனல் வீரம் நீங்கி
மேனியெலாம் வியர்வைநீர் சிந்த, மேலும்
உக்கியதன் னுளத்துடனோர் மரத்தின் நீழல்
உடல்சோர்ந்து குளக்கரையில் உறங்கும் போது
தக்கதன துளத்தினுறை தலைவ னுங்கே
தனதெதிரே வரக்கண்டாள் சடுதி யாக. (6)

அவன்வந்த பரிதன்னை அவள்தன் கையால்
அச்சமுடன் பிடித்தபின்னர் அங்கை நீட்டித்
தவமுடையீர் இரண்டுசதந் தருவீ ரென்று
தாழ்மையுடன் அவளங்கே சாற்றி நிற்க,
அவனுடனே அழகுடையாய் உன்னூர் எங்கே ?
அரம்பையே ! என்றவுடன் அவளுஞ் சொல்ல,
உவகையொடென் காதலியுன் னூரில் உள்ளாள்
உரைத்திடுவாய் அவள்சுகத்தை உடனே யென்றான். (7)

அருவருக்கும் உடையுடுத்த அவளும் பின்னர்
அவனுளத்தைச் சோதிக்கும் ஆவல் கொண்டே,
இருவருடத் தின்முன்னர் இறந்து விட்டாள்
எங்கிருந்தீர் இவ்வளவும் இயம்பீ ரென்ன,
உருக்குலைய உள்ளமெலாம் உடைந்தே யுக்க
ஊனுருகிப் பைத்தியம்போல் ஊக்க மின்றிப்
பரிதன்னைக் கைவிட்டுப் பணத்தை வீசிப்
பக்கத்தி லுளகுளத்துட் பாயச் சென்றான். (8)

வேறு

நின்றிடு நின்றிடு நிலையில் நின்றிடாய்
குன்றன தலைவனே கோனே நின்றிடாய்
உன்றன துளத்தினில் உறையுங் காதலி
நின்றன தருகினில் நிற்கின் றாளரோ! (9)

துக்கமே வழிவிடு தூர நின்றிடாய்
இக்கணம் இன்பமே எதிரில் வந்திடாய்
தக்கநற் கணவனைச் சாலப் பெற்றுளேன்
மிக்கபொற் காதலே மிளிர! என்றனள். (10)

மலருடன் நறுமணம் மருவும் பான்மைபோல்
அலையுடன் பெருங்கடல் அமருந் தன்மைபோல்
நிலவுடன் பாலொளி நெருங்கி நேர்தல்போல்
உலகிலிங் குறைந்தனர் அவனும் அவளுமே! (11)

---

* The Bailiff's Daughter of Islington என்ற ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# ஆலனின் காதல்

விருத்தம்

எரித்திட விறகோ இல்லான்
ஏர்களோ உழுதற் கில்லான்
பரிகளோ பாய்தற் கில்லான்
பகழிகள் கரத்தில் இல்லான்
வரிசிலை தோளி லில்லான்
வலியவோர் வாள்கொண் டுள்ளான்,
வெருவிடத் தக்க இந்த
வீரனின் தொழிலைச் சொல்மின் ?

*விறகு, ஏர், குதிரை, பகழி, வரிசிலை முதலியன அவனிடம் இல்லை. ஆனால், ஒரு வாள் அவனுடைய கையில் உண்டு. பலரும் பயப்படும் அவனுடைய தொழிலென்ன?* (1)

பணமது நிரம்ப வுள்ள
பாக்கிய வானும் ஆலன்,
பிணமதும் பயந்தே ஓடும்
பெரியதோர் தொழிலைச் செய்வான்
கணமதில் வாரீர் நீவிர்
களிப்புடன் கதையைக் கேட்டுத்
துணிவுடன் அவன்தான் செய்யுந்
தொழிலெது கூறு வீரே !

*ஆலனிடம் பணமுண்டு. பிணமும் பயப்படுந் தொழிலைச் செய்கின்றான், கதையைக் கேட்டு, அவனுடைய தொழிலென்ன என்பதைக் கூறுங்கள்.* (2)

நற்பெருங் குணத்தி னோடு
    தலையினை யுயர்த்திக் கொண்டு
வெற்றியை யுடையோ ராக
    விளங்கிடுங் குபேர ருக்கு,
வற்றிடாக் குளத்தில் மீன்கள்
    வலையினிற் பிடித்தற் குண்டு
சுற்றிட விளையாட் டெல்லாங்
    கணிப்பிலாக் களங்கள் உண்டு.

வேட்டைக்கு மிருக முண்டு
    விலங்குகள் பழக்கற் குண்டு
கோட்டைகள் வசித்தற் குண்டு
    கொடியெலாம் உயர்த்தற் குண்டு
நாட்டிய மாடு தற்கு
    நங்கையர் பலரு முண்டு
வீட்டினிற் குபேர ருக்கு
    வேறுபல் நயங்க ளுண்டு.

பெருமையுடன் வாழ்கின்ற குபேரருக்கு மீன் பிடிக்கக் குளங்களுண்டு, விளையாட இடங்களுண்டு, வேட்டையாடவும் பழக்கியெடுக்கவும் மிருகங்களுண்டு, நாட்டியமாடப் பெண்களுண்டு, வசிக்கக் கோட்டைகளுண்டு. (3,4)

பட்டங்கள் பதவி யில்லான்
    குபேரரும் பணியும் ஆலன்
கட்டியக் காரர் மிக்க
    காவலன் போன்ற வீரன்,
தட்டிட மாட்டார் ஆலன்
    தன்சொலைப் பலரும் என்றால்
எட்டிடாச் செல்வ மேதும்
    இருக்குமா பூமி மீதே !

பட்டங்கள் பதவிகளில்லாவிட்டாலும், அவனைப் பணிந்தே குபேரரும் நடப்பர். அவன் சொல்லை எவருந் தட்டமாட்டார். அவனுக்குக் கிட்டாத செல்வம் பூமியிலில்லை (5)

இப்புகழ் இளைஞன் அங்கோர்
எழில்மிகு பெண்ணைக் கண்டே
ஒப்பிலாக் காதல் கொண்டான்,
உளமெலாங் கொதிக்க அந்தச்
செப்பரும் வனப்பில் மிக்க
சேயிழை வீடு சென்று
தப்பிலாக் காதல் தன்னைத்
தாயிடஞ் சாற்றி னானே!

அவன் ஓர் அழகிய பெண்ணைக் காதலித்தான். அவளின் வீட்டிற்குச் சென்று, அவளுடைய தாயாரிடந் தனது காதலைப் பற்றிக் கூறினான். (6)

"உணவுடை கொடுத்துப் பெண்ணை
உயர்வுற வாழ வைக்கப்
பணபலந் தகுந்த வீடு
பாரிலே உண்டோ?" என்று
கணமதும் பொறுக்கா நின்று
காதலி தாயார் கேட்கப்
பணமெலாம் மிக்க ஆலன்
பகர்ந்தனன் விடைக எம்மா.

உடனே அவளின் தாய், "நல்ல உணவும் உடையும் மனைவிக்கு வாங்கிக்கொடுக்கப் பணமுண்டா? நல்ல வீடு உண்டா?" என வினவினாள். அவன் விடையளித்தான். (7)

"பெரியதே என்றன் வீடு
பேர்பெறும் இயற்கை வீடு
கரியநல் முகில்க ளெல்லாங்
கவிந்தெமை நிற்கும் மேலே,
சிரிக்குமே வீட்டின் மேலே
சீரிய விண்மீன் கூட்டம்
அரியசீர்க் குபேரர்க் கெல்லாம்
அரசனும் நானே," என்றான்.

''இயற்கை வீடுண்டு. கரும் முகில்களே அதன் கூரை, விண்மீன்களே விளக்குகள். குபேரரின் அரசனே நான்,'' என்ருன். (8)

தந்தையோ இரும்பாய்ப் போஞன்
தாயுமோ கல்லாய்ப் போஞள்
வந்தஅவ் வழியைக் காட்டி,
''மன்னனே போய்வா,'' என்ருர் ;
சிந்தைநொந் தழும்பேர் ஓசை
சேர்ந்திடு மறுநாட் காலே
விந்தையாய்க் கேட்ட தந்த
வீட்டினில் வியக்க யாரும்.

இதனைக் கேட்ட பெற்ருேர் வாய்பேச முடியாதவரா யினர். வந்த வழியே திரும்பும்படி கூறினர். மறுநாள் அவ் வீட்டில் அழுகை ஒலி கேட்டது. (9)

சாதலோ விலாத காதல்
சால்புடை யுண்மைக் காதல்
காதல னுளத்தி னின்றுங்
கனிவுடன் வெளியே வீசச்
சாதங்கள் படைத்துக் காட்டிற்
சாற்றிஞன் காத லிக்கே
ஏதமில் கதைக ளெல்லாம்
எழில்பெறு மொழிக ளாலே !

காதலியைக் கானகத்துக்குக் கடத்திச் சென்று, உண ஆட்டி, காதல் மொழிகள் பேசிஞன். (10)

அவனுடைய தொழிலென்ன ? ? ?

---

* Sir Walter Scott எழுதிய Allen - A - Dale என்ற ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# தாயுஞ் சேயும்

வெண்பா

ஓர்பத்து மாதம் உதரத்திற் றாங்கியபின்
சீர்பெறவே யீன்ற சிசுவொன்று — பேர்பெற்ற
சான்றோ னெனப்பெரியோர் சாற்றச் செவிமடுப்பின்
ஈன்றவள்புண் மாறும் இனிது.

பத்து மாதஞ் சுமந்து பெற்ற தனது குழந்தையைப் பெரியோர் சான்றோனெனக் கூறக்கேட்டால், தாய் துன்பம் மறந்து இன்பம் அடைவாள். (1)

விருத்தம்

தாயவட்குக் குழந்தைபெறுந் தருணந் துன்பம்,
சாதலின்றி வளர்த்தெடுக்கச் சகியாத் துன்பம்,
நோயின்றிக் காப்பாற்ற நுண்மை யாக
நொடிப்பொழுதிற் பொங்கிவரும் நூறு துன்பம்,
சேயதற்கு வியன்பருவஞ் சேர்ந்தாற் துன்பம்,
தென்னவன்வந் துயிர்கொண்டாற் துன்பம், மேலும்
வாயினிலே அடித்தலறும் வறிய தாய்க்கு
வானின்றுஞ் சேய்தன்னல் வாரா தின்பம்.

பிள்ளைப் பேற்றின்போது துன்பம், வளர்த்தல் துன்பம், நோயின்றிக் காப்பாற்றத் துன்பம், பருவம் அடைந்தாற் துன்பம், இறந்தாற் துன்பம், தாய்க்குப் பிள்ளைகளால் இன்பமே இல்லை. (2)

# அவள்

## கிளிவிடு தூது

இராகம் : பிலஹரி　　　　தாளம் : திஸ்ர ஏகம்

சித்திரப் பூவெனச் செந்தமிழ்த் தேனெனச்
　　சீர்பெறும் பச்சை யுடலுடையாய்
பத்தரை மாற்றுப் பசுங்கிளி யேயுனைப்
　　பார்த்திட என்மனந் துள்ளுதடி. (1)

செந்நெல் வளர்ந்து சிறப்புற நிற்குதோ
　　சித்திரப் பூங்கா செழித்திருக்கோ
உன்னுடல் பார்த்ததும் ஒப்பில் பசும்நிறம்
　　ஒன்றும் நிகர்க்கா துனதழகை. (2)

செந்தமிழ்த் தேன்போற் சிறப்புறும் பேச்சிலும்
　　சிவந்த அழகுறுஞ் சொண்டிலுமே
என்தன் உளத்தை எளிதிற் பறித்திட்டாய்
　　என்னரும் பைங்கிளி என்னிடம்வா ! (3)

அம்மா சமையல் அடுக்களை வேலையில்
　　அப்பா அலுவ லகத்தினுக்குச்
சும்மா எனதுளத் துள்ளதைச் சொல்கிறேன்
　　சொர்ணக் கிளியேநீ கேட்டிடடி. (4)

காதல் விருப்பிலே காம நெருப்பிலே
கார்நிற என்னுடல் வாடுதடி
வேதனை யாலே விழைகிறேன் ஆண்துணை
வீரன் ஒருவனைத் தேடிவாராய். (5)

மாங்கனி தின்றிடும் வண்ணப் பசுங்கிளி !
மாதுளம் பூநிகர் மன்மதனை
விங்கிள வேனில்போ லின்ப முதல்வனை
வீரக் குலத்தனைப் பார்த்துவாராய். (6)

தேடித் திரிந்தெங்கும் ஓடிவா ராயிங்கு
திவ்விய தேன்மொழிப் பாலகனைப்
பாடிப் படித்துமே என்னுடன் கொஞ்சிடப்
பாடகப் பாலனைப் பார்த்துவாராய். (7)

என்றுமே யென்னுடன் கூடி விளையாடி
என்சொல்லுக் கேட்போனைக் கொண்டுவாராய்
நின்றுநான் சொல்லிடச் சொன்னவை செய்திடும்
நேர்மிகு மாமியும் பார்த்துவாராய். (8)

நல்ல ''பவுட''ரும் ''லிப்ஸ்டிக்'' பலவிதம்,
நல்லபட் டாடையும் நற்''சென்ற்''றும்
கல்லுப் புரூச்சுங் கனமான தோடுமே
கட்டத் தருவோனைப் பார்த்துவாராய். (9)

''சோபா'' அணையிற் சுகமாய்ப் படுத்திடச்
சோறு தருவோனைப் பார்த்துவாராய்
''டீபனுங் கேக்குமே வட்ட''ரும் நெய்யுமே
''டீ''யுடன் தந்திடப் பார்ந்துவாராய். (10)

பாலகன் செத்தபின் பால்பழம் உண்டிடப்
பணமுடன் "பென்சு"னும் உள்ளவனுய்ச்
சிலமுஞ் செந்நிறத் தோற்றமும் உள்ளவோர்
சிவந்தநல் மாப்பிள்ளை பார்த்துவாராய். (11)

விஞ்ஞான காலத்தில் மேவிடும் நாமெலாம்
வேகமாய்ச் சென்றிடு "காரி"னிலே
எஞ்ஞான்று செல்லினும் என்னை யருகிலே
ஏற்றுக் கொணர்வோனுய்ப் பார்த்துவாராய். (12)

தவளையைக் கிறியே தான்வித்தை கற்றிட்ட
"சயன்சிலே டொக்டரே" வேணுமடி
குவளையின் நேர்விழி கொண்டிடும் என்முகங்
கொழுத்திட வைப்போனுய்க் கொண்டுவாராய். (13)

அம்மா எழுந்தே அருகில் வருகிறுர்
அன்புக் கிளியே ! அலருதே
அம்மா விடத்திலென் அன்புக் கதைகளை,
ஆனல்நீ தேடிவா ஆடவனை. (14)




# கனவில் வந்த கன்னி!

இராகம் : பைரவி　　　　　　　　　　தாளம் : ரூபகம்

நித்திரை செய்கையிலே — கனவில்
　　நேரிலாக் கட்டழகி
ஒத்திகை போடவந்தே — என்னுடல்
　　உள்ளமும் பொங்கவைத்தாள். (1)

கையில் நுளம்பொன்று — கடிக்கக்
　　கனவுங் கலைந்ததுவே
மெய்யில் வியர்வையுடன் — களித்து
　　விழித்தேன், அவள்மறைந்தாள். (2)

வண்ணப் புருப்பறந்தே — என்முன்னர்
　　மலர்ந்த முகத்துடனே
உண்ண வருகையிலே — கனவை
　　உரைத்தேன் அதனிடத்தில். (3)

அன்ன நடையுடையாய் — என்புரு !
　　அழகு மயிலனையாய்
கன்னி ஒருத்தியையான் — கனவிற்
　　கண்ட கதைகேளாய். (4)

மானது சாயலுடன் — மாந்தரில்
　　மன்மத னப்பு வீசும்
மீன்ன் விழிபோன்ற — கண்ணுடன்
　　மேனி மிளிர்ந்ததடி ! (5)

முத்துப் பதித்திருக்கும் — பவளம்
வெட்கி முகங்கறுக்கும்
நித்திலப் பற்களெலாம் — நினைக்க
நெஞ்சம் பிளக்குதடி ! (6)

பாதிப் பிறைபோலே — அவளின்
பளிச்சிடும் நன்னுதலுஞ்
சீதசெந் தாமரையாம் — முகமுஞ்
சீரிய காட்சியடி ! (7)

மங்குல் மயிர்வனப்பும் — மலைபோல்
மார்பும் மனங்கவரப்
பொங்கும் எனதுள்ளம் — அவளின்
பொலிவில் மயங்குதடி ! (8)

கோடைக் குயிலாக — உள்ளத்திற்
கூவிக் குலாவுகிறுள்
மேடை நடிகைகளும் — அவள்போல்
மென்மொழி பேசுவரோ ! (9)

மின்னும் இடையுடையாள் — இயற்கை
மிளிரும் அழகுடையாள்
மன்னும் எழிலுடையாள் — அவளின்
வாய்மொழி கேட்பதெப்போ ? (10)

அழுதேன் அவள்நினைவால் — அப்புரு
அதனைச் சகிக்காமல்
எழுந்து பறந்துமர — நுனியில்
இருந்தே அழுததுவே ! (11)

★ ★ ★

## மேனாட்டு நடனக்காரி

விருத்தம்

கொங்கைகள் துள்ளி யாடக்
குலுங்கியும் அசைந்து மாடப்
பொங்கிய செயற்கைக் கொண்டை
போர்த்திடுந் தலையு மாட
அங்கவள் ''மினி''க்குக் கீழே
அழகிய தொடைக ளாடப்
பங்கயக் கைகா லாடப்
பாவையும் ஆடி னாளே.

மினி = Miniskirt

★

## பரத நாட்டியப் பாவை

விருத்தம்

கண்ணாடக் கண்ணுள்ளே மணியு மாடக்
கழுத்தசையத் தலையசையக் கரங்க ளாடப்
பெண்மையொடு மென்மைதிகழ் விரல்க ளாடப்
பின்னலதும் அசைந்தசைந்து பின்னு லாடக்
கண்பறிக்கும் மெய்மறைக்கும் உடையி னுள்ளே
காலசைந்து கணிப்போடு தாளம் போடப்
பண்ணோடு நட்டுவனார் பாடல் பாடப்
பரதநாட் டியமாடிப் பாவை வந்தாள்.

# திவ்விய தீந்தமிழ்த் தாய்

விருத்தம்

அன்னையே காட்டிப் போந்தாய்
    அழகுடை ஒளியாந் தன்னை
என்னையே அடிமை யாக
    ஏற்கவோ அறிய மாட்டேன்,
மன்னிய உலகந் தன்னில்
    மாண்புடன் விளங்கா நிற்கும்
இன்னிய தமிழின் தாயே
    எழில்பெறும் அன்னே ! அன்னே !

உலகிற் பெருமையுடன் விளங்குந் தமிழ்த்தாய், தனது அழகுள்ள ஒளியை எனக்குக் காட்டியது, என்னைத் தனது அடிமையாக்குவதற்கா? அறியேன். (1)

எண்ணிலா வாகை சூடும்
    ஈடிலா அருச்சு னற்குக்
கண்ணன்தன் னுருவைக் காட்டக்
    கண்ணுற்ற காட்சி யேபோல்,
மண்ணிலே பிறந்த யானே
    மாட்சிமைப் பட்ட இந்தத்
தண்ணளி யுடைய எங்கள்
    தாயது காட்சி கண்டேன்.

கண்ணபிரான் தனது உருவைக் காட்ட, அருச்சுனன் கண்ட காட்சியைப் போல, மண்ணிற்பிறந்த நானும் தமிழன்னையின் காட்சியைக் கண்டேன். (2)

எல்லையில் லறிவை யெங்கள்
இறைவியே ஈயக் கண்டேன்,
தொல்லையிற் றமிழை யெங்குந்
தொழுதிடும் மாந்தர் கண்டேன்,
ஒல்லையில் உலக மெங்கும்
ஒளிபெறுந் தமிழைக் கண்டேன்,
எல்லையில் இன்பங் கண்டேன்
இறைவியைக் கண்டே னம்மா!

அளப்பரிய அறிவைத் தமிழன்னை அளிப்பதையும், அவளைத் தொழுதேத்தும் மக்களையும், தமிழ் எங்கும் பிரகாசிப்பதையுங் கண்டு பேரின்பம் அடைந்தேன். (3)

இனியநற் றமிழை நாங்கள்
இகழ்வதை நிறுத்தி விட்டுக்
கனியென அதனை யென்றுங்
கசடறக் கற்போ மாயின்,
தனியொளி தரணி யெங்குஞ்
சால்புடன் விளங்கும், மேலும்
மனிதரும் மாட்சி பெற்று
மாண்புடன் வாழ்வர் மாதோ!

தமிழை இகழாது, அதனை மகிழ்வுடன் ஐயந்திரிபறக் கற்றுணர்வோமாயின், தமிழும் ஓங்கும்; மக்களும் ஓங்குவர். (4)

* * *

# அவளும் அவையும்

## இசை

விருத்தம்

கோயில்களிற் தவில்நாதங் குழலின் நாதங்
குமுறுகையில்; வீடுகளிற் குமரிப் பெண்கள்
தூயஇசை யாற்பூசை துலங்கச் செய்ய,
தொட்டிலிலே குழவியினைத் துள்ளி யாட்டி
வாயாரத் தாலாட்டு மகிழ்ந்து பாடி
மனைவியர்கள் குதூகலிக்க, மனைகள் தம்மிற்
காயான கவிதையெலாங் கனிக ளாகிக்
கவினிசையாய் இனிமைதருங் காதிற் காண்பீர்.

*கோயில்களிற் தவிலுங் குழலும் ஒலிக்கையில்; பெண்கள் வீடுகளில் இசையினாற் பூசைகள் செய்யவும், மனைவியர் இசையுடன் தாலாட்டுப் பாடித் தொட்டில்களையாட்டவும், காய் போன்ற கவிதைகள் கனிந்து இசைப் பழங்களாகிக் காதில் இனிமைதரும்.*

## கற்பு

வெண்பா

கற்புள்ள கண்ணகியைக் கண்ணுகப் போற்றியே
நற்பண்பு கொண்டுலகில் நங்கையரே — சிற்பியென
மேதையெனத் தெய்வமென மேலோர் புகழ்ந்துரைக்கச்
சீதையென வாழ்வீர் சிறந்து.

சிற்பியெனவும், மேதையெனவும், தெய்வமெனவும் பெரியோர் போற்றக் கூடியதாகக் கற்புள்ள கண்ணகியைப் பின்பற்றிச் சீதைபோற் பெண்மணிகளெல்லோரும் வாழ்வீர்களாக!

* * *

## திருமணம்

விருத்தம்

குரங்குபோல் முகமா னுலுங்
　　"கோவண மேந்தான்" என்ருற்
பருமுலை மார்பி னுளும்
　　பங்கய முகத்தி னுளும்
அருந்துடி யிடையி னுளும்
　　அழகிய தொடையி னுளுந்
திருமணஞ் செய்ய வெண்ணித்
　　தேடியே வருவர் மாதே!

குரங்கு முகங்கொண்ட அழகற்றவனுயினும், அவன் அரசாங்க அலுவல் பார்ப்பவனென்ருல், அவனைத் திருமணஞ் செய்யப் பேரழகிகளுந் தேடி வருவர்.

* கோவணமேந்தான் = Government Servant

# அவன்

## திருக்கேதீச்சரன்



விருத்தம்

கேதெனுங் கிரகம் முன்னாட்
  கிரமமாய்ப் பூசை செய்துந்
நீதறத் தொழுதும், ஈசன்
  சிவனது கிருபை கொண்டான்,
ஆதலின் அப்பேர் பெற்ற
  ஆலயந் தன்னை ஆன்றோர்
கேதீச்ச ரப்பேர் சூட்டிக்
  கேடிலா தோய்பி னாரே !

நவக்கிரகங்களுள் ஒன்றாகிய கேது பூசைகள் செய்து, சிவபெருமானுடைய கிருபையைப் பெற்ற திருத்தலமா கையால், திருக்கேதீச்சரம் என்னும் பெயர் பெற்றது. (1)

சிவபெரு மானின் தொன்மைக்
திருத்தலந் திருக்கே தீச்ரம்,
அவனியிற் பாலா விப்பேர்
அழகிய கரைமேல் நின்று
புவியினி லுள்ளோர்க் கெல்லாம்
புகழ்பெறு கிருபை நல்க,
எவருமே மாதோட் டத்திற்
கேகியே தொழுதிட் டாரே!

இப் பழமை வாய்ந்த தலம், பாலாவியின் கரைமேல் நின்று அருள் சொரிவதனுல், மக்கள் அதனைத் தொழுதேத்தினர். (2)

"வலியவன் யான்யான்" என்று
வாயுவுஞ் சேட னும்போர்
பலமுடன் புரிந்த போது,
படமெடுத் தரிய மேரு
மலையினை ஆதி சேடன்
மறைத்திடக் கண்ட வாயு
மலைநுனிச் சிகரம் பேர்த்து
மண்ணினி லெறிந்திட் டானே.

வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் வலிமைப்போர் நடந்தபொழுது, ஆதிசேடன் படமெடுத்து மேரு மலையை மறைத்தான். அதனைக் கண்ட வாயு, மேரு மலையின் சிகரங்களைப் பெயர்த்து எறிந்தான். (3)

மண்ணினில் விழுந்த மேரு
மலைதனின் சிகர மொன்றே
தண்ணருந் திருக்கே தீச்ரத்
தலமென மிளிர்ந்த தென்பர்,
வண்ணமாய் மயனே கோயில்
வகுத்தன னென்பர், விண்ணோர்
பண்ணினுர் அர்த்த சாமப்
பூசைகள் பலவும் என்பர்.

மண்ணில் விழுந்த மேருவின் சிகரமொன்றே திருக்கேதீச்சரம் என்றும், மயன் என்பவனே கோயிலைக் கட்டுவித்தான் என்றும், தேவர்களே அங்கு அர்த்தசாமப் பூசைகள் செய்தனர் என்றும் பலர் கூறுவர். (4)

புயவலி வாயு தந்த
புண்ணிய மாதோட் டத்தில்
மயனெனும் பெயரான் யாரோ
மகிழ்வுடன் வாழ்ந்து வந்து,
பயனுறு பணிகள் செய்து
பாலாவி நீரி லாடிப்
பெயருற வாழ்ந்தே ஈசன்
பேரடி யிணைந்தா னென்பர்.

மயன் என்பவன் மாதோட்டத்தில் வாழ்ந்து, பல பணிகள் புரிந்து, பாலாவியில் நீராடி, வியனுலகு அடைந்தான் என்பர். (5)

குரவரின் தேவா ரங்கள்
கூறுமித் தலம்,பா லாற்றின்
கரையினி லுள்ள தென்றும்,
கவின்பெறு மாதோட் டத்தில்
உரைபெற இருந்த தென்றும்
உரைத்திடக் கேட்டு, நாமித்
திருத்தலத் தொன்மை தன்னைத்
தெரிந்திட முடியு மம்மா.

இத் தலம் பாலாற்றின் கரையில் உள்ளதென்றும், மாதோட்டத்தில் உள்ளதென்றும், தேவாரங்கள் கூறுகின்றமையால், இதன் பழமையை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. (6)

புதைபொருள் பலவுங் கண்டு
　　புனிதமாந் தலமொன் றிங்குச்
சிதைந்ததென் றறிந்து மக்கள்,
　　சிவபெரு மானின் நாமம்
இதம்பெறு மாறே யிந்த
　　இடத்திலே கோயில் கட்டி
விதம்வித மான தெய்வ
　　விக்கிர கங்கள் வைத்தார்.

இவ்விடத்திற் புதைபொருள்கள் காணப்பட்டமையால், இங்கு பழைய தலமொன்று அழிந்ததெனஅறிந்து, சிவபெருமானின் நாமம் விளங்குவதற்காகக் கோயிலொன்றை மக்கள் எழுப்பிப் பல விக்கிரகங்கள் செய்வித்து வைத்தனர். (7)

கட்டளைக் கலித்துறை

உலகில் உலவும் உயிர்க ளனைத்தையும் உண்டுபண்ணி
மலைகள் கடல்நதி வான்மதி ஆத வனும்படைத்து
விலைகள் மதிக்க வியலா மனித மிகவரிய
தலையாம் பிறவி தருந்திருக் கேதீச் சரத்தவனே.

உலகிலுள்ள உயிர்களனைத்தையும், மலை, கடல், வான், மதி, சூரியன் முதலியனவற்றையும், அரிதாய மானுடப் பிறவியையும் படைத்தவன் திருக்கேதீச்சரத்தவனே. (8)

அறுத்திட ஆன்மா மலம்மூன்றும், அன்பாய் அருள்சொரிய,
அறஞ்செழித் தோங்க, அருவம் உருவம் அருவுருவாம
சிறந்தநன் மூன்று திருமேனிகொண்ட சிவபெருமான்
மறத்தை ஒழித்திட மாதோட்ட மண்ணினில் வந்தனனே.

மும்மலம் அழியவும், அருள் பொழியவும், தருமந் தழைக்கவும், அருவம் உருவம் அருவுருவம் என்னும் மும் மேனிகளைக் கொண்ட சிவபெருமான், மாதோட்டத்திற்கு வந்தான். (9)

ஞாலம் முழுதிலும் நன்கு நிறைந்து நகர்ந்திடினும்
பாலிலே நெய்யெனப் பார்க்க வியலாப் பரமசிவன்,
சீலத் தயிரிற் றிகழ்ந்திடும் நெய்யெனத் தீச்சரத்தான்
கோலந் தெரிந்திடக் கோனென நிற்பனிக் கோயிலிலே.

உலகெங்கும் வியாபித்திருந்தாலும், பாலில் நெய் போலக் கண்ணுக்குத் தெரியாதவன் சிவபெருமான். திருக்கேதீச்சரத்தில் மட்டுந் தயிரில் நெய் போலக் காணக் கூடியவனாக விளங்குகின்றான். (10)

★ ★ ★

குறிப்பு:— திருக்கேதீச்ரம் — தொகுத்தல் விகாரம் பெற்று நின்றது.

தீச்சரத்தான் — முதற்குறை.

# கதிர்காமக் கந்தா!

கட்டளைக் கலித்துறை

உதிரம் உறிஞ்சி எனதுடல் தன்னை உருக்குவதேன்?
விதிர்விதிர்ப் போடுநான் என்றுந் தொழுவேன் விருப்பமுடன்
எதிர்வருங் காலம் வருத்திடா தென்றன் இடர்களைந்து
கதிர்காம வேலா யுதனே கடையேனைக் காத்தருளே.

என் உடலை ஏன் உருக்குகின்றீர், கதிர்காமக் கந்தனே! உம்மை என்றுந் தொழுதேத்துவேன், எனது துயர்களை நீக்கிக் காத்தருள்வாயாக. (1)

காத்தே யுலகைக் கருணையோ டோப்புங் கடலனையாய்
ஏத்தி யுனையென்றும் இன்னலைத் தீரென் றிசைத்திடினுஞ்
சாத்திச் செவி,கண் சயனித் திடலுமக் குத்தகுமோ?
மூத்த தமையனைக் கூப்பிட வோ?நீ மொழிநமக்கே.

உலகைக் காத்தருளுந் தேவனே! எனது துன்பத்தை நீக்கும்படி வேண்டவும், கண்கள் காதுகளை மூடி நித்திரை கொள்வது தகுமோ? கணபதியிடம் முறையிடவா? (2)

நமக்கு மனமெலாம் உன்னை நினைத்திட நையுதையோ!
எமக்கெலாம் வேண்டும் வரத்தை விரைவினில் ஈந்தருள்வாய்
சுமக்கும் இடர்ப்பொதி யெல்லாம் இறக்கத் துணைபுரிந்தே
இமைக்கும் பொழுதிலே இன்னலைத் தீர்ப்பாய் எனதிறையே.

உன்னை நினைக்கவே என் உள்ளம் உருகுகின்றது. கேட்கும் வரங்களைத் தந்து, எனது துன்பங்களைத் தீர்த்தருள்வாயாக. (3)

இறையே உடலின்பம் வீட்டின்பந் தாவென் றிறைஞ்சுகின்றேன்
பொறையே எனதரும் வாழ்வில் ஒளியைப் பொறித்தருளிப்
பறையனும் என்றன் மலம்நீக்கி நீயுமிப் பாவியுடன்
உறைந்திடா விட்டால் எனதுயிர் உக்கி உதிர்ந்திடுமே.

இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் இன்பந் தந்திடுவாய். வாழ்வின் ஒளியைக் காட்டி, என் மலத்தை நீக்கி, என்னுடன் நீரும் வந்து வாழ்வாயாக. இன்றேல், எனது உயிரே வேதனையடையும். (4)

★

# ஞான வயிரவர்

*கலிவெண்பா*

காளியுடன் எங்குங் களிநடனம் ஆடிவருந்
தூளிற் துரும்புகளிற் தூணி லிருக்கின்ற
ஞான வயிரவரே! நம்மவரைக் காப்பவரே
தானவர்க்கு ஞானந் தழைக்க அருள்தருவாய்!
பாசம் அறுக்கும் பரமசிவன் புத்திரனே,
நேசமொடு சூலத்தை நேராகக் கைப்பிடித்தே
ஆசை யறுக்கவல்ல அற்புதனும் வைரவனே
தேசமெலாஞ் ஞானந் திகழ அருள்தருவாய்!
ஆன்மா தழைக்க அருளைச் சொரிந்திடவே,
நான்முகனின் மண்டையினை நானிலத்தோர் காண்பதற்காய்க்
கிள்ளி, அகந்தையெனுங் கேட்டை ஒழித்திட்ட
வள்ளலே ஞானம் வளமுடனே தந்தருள்வாய்!
ஆய கலைபெருக, அன்பர் உளமுருக,
நேயர்கள் நெஞ்செல்லாம் நேராய் உனதடியைப்
பற்றியே வாழ்ந்திடவே பாங்காய் அருள்சொரிந்து
வற்றாத ஞானம் வழங்கு.

# நல்லூர்க் கந்தன்

## ( 1 )

இராகம் : கல்யாணவசந்தம் தாளம் : ஆதி

பல்லவி

வேலவா தஞ்சம் வீரவேள் தஞ்சம்
மாலோனின் மருகா, நல்லூரா (வேலவா)

அனுபல்லவி

கைலாசமேல் . . . . . ஏறியே காட்சியைத் தருங்
கைலாசன் மாமகன் கந்தனே, முருகா (வேலவா)

சரணம்

வானோர் தொழுதிட மயில்தன்னில் வருமன்பா
தேனும்மொழிக் குஞ்சரிச் சிரோன்மணி
மானனைசீர் . . . . வள்ளியோ டேறெனவரும்
தானோர்கள் ஏற்றிடும் நல்லையின் குமரா (வேலவா)

## ( 2 )

இராகம் : யமுனகல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

திருவருள் தரவருந் திருமுருகா — பெரும்
புரமெரி பரமனின் புதல்வனே — அருந் (திரு)

அனுபல்லவி

அரகர சண்முக அரிமருகா வருக
சரவண பவவெனுந் தாரகையே வருக (திரு)

சரணம்

கோதில் சிவனுக்குக் குருவென வீற்றிருந்தே
ஓதி அறநூலை உபதே சித்தோனே வாவா !
நாத உருவோனே நல்லை நகர்வாழுங் கந்தா
பாத கமலத்தைப் பார்க்க மயில்மேல் வாவா ! (திரு)

## ( 3 )

இராகம் : சகாணு தாளம் : ஆதி

பல்லவி

நன்னிலே அளிப்பவனே நல்லூர் முருகா கந்தா
உன்னரும் பக்தரை நீ ஓம்பிடுவாய் முருகா ஓம்பிடுவாய்
( நன்னி )

அனுபல்லவி

பொற்பதி யாழ்ப்பாணப் போற்றருந் தலைநகராம்
நற்பதி நல்லூரின் ஞானவேற சரவணனே ( நன்னி )

சரணங்கள்

நறுந்தமிழின் இயலிசையும் நாடகமுங் காப்பவனே
நிறைசெறி குஞ்சிவள்ளி நாயகா சரவணனே
குறையை நிறைக்கும் நல்லூர்க் கோயில்வாழ் பெருமகன்
வறியவர்க் கருளும் வடிவழ கோனே ( நன்னி )

ஆறு முகமுங் காண ஆறிரு கரமுங் காண
கூறுசெய் உன் தனிவேல் காணக் குமரா கந்தா
நூறுமுறை சுற்றிவந்து நூறுதரம் பாடல்பாடி
நாறு மலரைத் தந்தேன் நாயகனே திருவேலா. ( நன்னி )



# கண்ணனின் காதல்

இராகம் : சாருகேசி　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

கண்ணனின் காதலில் இன்பங் கண்டேன்
கண்ணைக் களவாகக் கவர்ந்திடும்　　　　(கண்ண)

அனுபல்லவி

பின்னலைத் தடவியே பின்னுடலைக் கிள்ளி
என்னுடற் துகிலினை எட்டி யிழுக்கும்　　　　(கண்ண)

சரணம்

கையினை நீட்டிக் காதினைக் கிள்ளிக் கனியே யெனவே
மையல்கொண் டேயெனை மகிழ்ச்சியுடன் வாரியே
கட்டி யணைத்திடுவான்
பையில் மலருடன் பாய்ந்துவந் தென்கொண்டை தன்னிற்
சொருகிடுவான்
பலமுறை கெஞ்சிப் பக்கலில் இழுத்தெனை வாயில் முத்தம்
இடுவான்
(கண்ண)



# இயேசு அண்ணலே

இராகம் : ஹரஹரப்ரியா தாளம் : ஆதி

பல்லவி

மரியாள் மாதா மைந்தனே, யேசு
வானும் மண்ணும் மதிக்கும் மன்னனே! (மரி)

அனுபல்லவி

சிறிய வயதிற் திறமுடன் நூல்களைச்
சீருடன் படித்த தேவனே, அறிஞனே! (மரி)

சரணம்

புரிந்திடப் புனித யோவாண் அவர்கள்
உரைத்தநற் சமயப் பெரும்பொருள் உணர்ந்தும்
அருந்தவம் நாற்பது நாள்கள் புரிந்தும்
அருளைப் பெற்றநல் லரும்பெரும் அண்ணலே. (மரி)

* * *

# புத்தர் பெருமான்

விருத்தம்

தாரணி மீது வாழ்வோர்
தாம்படுங் கொடுமை யுன்னிப்
பாரிய பிறப்புக் கீர்த்தி
பதவியை வேண்டா மென்று
சீரிய அரச பீடஞ்
"சீ"யென வெறுத்த புத்தர்
பேரரும் புகழை யென்றும்
பேசுவோர் கேட்போர் வாழ்க!

* *

# கவிஞன்

## ( ஸ்ரீ சத்ய சாயிபாபா திருவாய்மொழிகள் )

விருத்தம்

முற்காலப் பெருமையெலாம் முறையாய்க் கற்று
முற்றாக விளங்கியவன், மோக ரிக்குந்
தற்காலம் உணர்ந்தறியுந் தன்மை கொண்ட
சற்குணத்தன், வருங்காலஞ் சாற்ற வல்ல
நற்குணத்தன், கவிதைகளை நன்னோக் கோடு
நானிலமும் பயன்கொள்ள நல்ல ஓசைச்
சொற்களினால் நற்பொருள்கள் சுவைக்கச் சொல்லின்
துன்றியவோர் கவிஞனெனச் சொல்ல லாமே.

முற்காலத்தை விளங்கியறிந்தவன், தற்காலத்தை உணர்ந்தறிந்தவன், வருங்காலத்தைச் சொல்ல வல்லவன், நல்ல நோக்குடன் பொருளும் ஓசையுந் திகழுஞ் சொற்களாற் கவிதைகளைத் தருவானாயின், அவன் பூரண கவிஞனாகின்றான். (1)

உள்ளத்திற் பரிசுத்த உணர்ச்சி கொண்ட
ஒருவன்தான் பெருங்கவிஞன், உண்மை! அன்னான்
உள்ளபடி முற்காலத் துலகைப் பற்றி
ஒருசார்பு மற்றதீர்ப் புரைக்க வல்லான்,
கள்ளமிலா நல்லவர்கள் கயவ ருட்தற்
காலத்திற் கலந்திருந்து களிக்க வல்லான்,
வள்ளலென வருங்கால வளர்ச்சிக் கான
வழிவகைகள் வகுத்தளிக்க வல்லான் மாதோ.

கவிஞன் என்பவன் பரிசுத்தமான உணர்ச்சிகளைக் கொண்டவன், முற்காலம் பற்றிச் சார்பற்ற தீர்ப்பளிக்க வல்லவன், தற்காலத்தில் நல்லோருடனுந் தீயோருடனுங் களிப்புடன் வாழ வல்லவன், வருங்கால முன்னேற்றத்திற்கு வழிவகைகள் கூற வல்லவன். (2)

# எழுத்தாளன்

குறள்வெண்பா

எழுத்தாளன் தானென் றிறுமாப்புக் கொள்வோன்
அழுகி யொழுகும் பழம்.

தான் ஓர் எழுத்தாளனென்று பெருமிதமடைபவன், அழுகி ஒழுகும் பழம் போன்றவன். அழுகிய பழம் உண்ணவும் உதவாது, அதன் விதை முளைக்கவும் மாட்டாது. அதுபோல இவர்கள் மக்களுக்குந் தமக்கும் உதவாதவர். (1)

வெண்பா

பேனா பிடிப்பவனோர் பேனாப யோகி, அந்தப்
பேனை பிடித்துழைப்போன் பேர்லிகிதன் — பேனையினாற்
தன்னுணர்ச்சி கொட்டித் தரணி தனைக்கவர்வோன்
சின்ன எழுத்தாளன் தெரி.

பேனை பிடிப்பவனைப் பேனையை உபயோகிப்பவனென்றும், பேனையால் உழைப்பவனை லிகிதன் என்றுங் கூற வேண்டும். தன் உணர்ச்சிகளைப் பேனையினாற் கொட்டி, மக்கள் மனத்தைக் கவருபவனை மட்டுமே, சிறு எழுத்தாளனென்று சொல்லலாம். (2)

# டீ. கே. சி.

வெண்பா

கல்விக் கடலான் கவியரசன் கம்பனெனுஞ்
செல்வக் களஞ்சியஞ் சிருற்ருன் — நல்வழியில்
வந்த இராமனெனும் மன்னன் கதையொன்றைச்
செந்தமிழிற் சீருடனே தந்து.

இராமாயணத்தைச் செந்தமிழில் எழுதிக் கவியரசன் கம்பன் பெருமை பெற்ருன். (1)

அந்தக் கவிஞன் அறைந்த கருத்தெல்லாம்
இந்தப் புவியின்கண் எய்தாமல் — வெந்துயரில்
வீழ்ந்த தமிழனுக்கு வீரமுடன் டீ. கே. சி,
ஆழ்ந்தபொருள் சொன்ஞன் அறிந்து.

இராமாயணத்தை அறிந்துணராத தமிழருக்கு, அதன் கருத்துக்களை அழகாக டீ. கே. சிதம்பரநாதன் எடுத்துரைத்தான். (2)

துன்பத்தில் ஆழ்த்துஞ் சுவைபொதிந்த பாடல்கள்
இன்பம் வெறியமைதி ஈயும்நல் — அன்புச்
சுரங்கக் கவிதைகளைச் சோபையுடன் பாரில்
அரங்கேற்றி ஞனே அவன்.

துன்பம், இன்பம், வெறி, அமைதி முதலியனவற்றை யடக்கிய கம்பன் கவிதைகளை, டீ. கே. சி. மக்கள் முன் அரங்கேற்றி வைத்தான். (3)

உள்ளத் துணர்ச்சியெல்லாம் ஊற்றெடுத்தே ஓசையுடன்
வெள்ளமென ஓடவே வேகமுடன் — உள்ள
கருத்தை உருசிபெறக் காதலுடன் தந்தான்
தருவாம் சிதம்பரநா தன்.

கம்பன் கருத்துக்களைச் சுவையுடன் எடுத்தியம்பி, மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினான் டி. கே. சி. (4)

வாழ்க பொருப்பினிலே வந்த தமிழமிழ்தம்,
வாழ்க கவிக்கம்பன் வல்லுரைகள், — வாழ்கவே
பாமரருங் கற்றுணரப் பாங்காய் நயமுரைத்த
தாமமுடை டி. கே. சி. தான்.

வாழ்க தமிழ்; வாழ்க கம்பன் கவிதைகள்; வாழ்க கம்பன் கவிதைகளின் நயமுரைத்த டி. கே. சி. (5)

# தேசாபிமானம் இல்லாதவன்

*கலிவெண்பா*

இன்னுயிருள் ளத்தில் இறந்தொழிந்து வாழுபவன்,
என்னூரே இஃதென் றியம்பாதான், வேற்றூரிற்
சீவித்த பின்னர் திரும்பிவரும் போதினிலே
ஆவி துடிக்காதான் அன்பெதுவும் இல்லாதான்
உண்டாயின் இப்போ துரைமின், உரைத்துப்பின்
சண்டா ளனைக்குறித்துத் தாரணியில் வைத்திருங்கள்!
பாணரவ னுக்குப் பரவசித்துப் பாடார்கள்,
காணரிய செல்வங் கணக்கிற் புகழ்மாலை
பேர்பதவி யுள்ள பெரியவனே யானாலுஞ்
சீர்பெற்று னல்லனென்று செப்புவரே மக்களெல்லாம்,
நிந்திப்பர் பேர்கீர்த்தி நீடுபுகழ் யாவையுமே,
சிந்தையிலே தன்னலமே சிராய்க் குடிகொள்ளும்
இந்த மனிதனவன் என்றும் இகழ்வடைவான்,
முந்தியநற் பேர்கீர்த்தி முற்றும் இழந்திடுவான்,
வாழ்வில் இருதரமே மங்கி யிறந்திடுவான்,
ஊழ்வினையாற் காலன் உயிர்கொண்டு போகையிலே
மக்கள் புகழார்,கண் மாரி சொரியார்கள்,
தக்க புகழ்பாடச் சற்றே தயங்கிடுவர்.
மண்ணில் எழுந்ததுபோல் வன்னுடலே சென்றுவிடும்
மண்ணுடனே மண்ணாய் மறைந்து.

*உள்ளத்தில் உயிரற்றவன் போல் வாழ்பவன், ''இது என் ஊர்,'' என்று சொல்வதிற் பெருமையடையாதவன், தன் ஊருக்குத் திரும்பிவரும்பொழுது மகிழ்ச்சியடையாதவன், எங்கேயிருப்பினும் அவனைக் குறித்து வையுங்கள்!*

*அவனைப்பற்றிப் புலவர் பாடமாட்டார். செல்வம். புகழ், பதவியென்பன இருந்தாலுஞ் சீரற்றவனென்றே எல்லோரும் அவனை இகழ்வர். அவன் சுயநலக்காரன்,*

பழம்பெருங் கீர்த்திகளை இழப்பான். சீவிய காலத்தில் இருதரம் இறப்பான்.

இறக்கும்பொழுது ஒருவரும் அவனுடைய புகழைப் பாடமாட்டார், கண்ணீருஞ் சிந்தமாட்டார். பூமியில் வந்த வண்ணமே, அவனுடலும் மண்ணுடன் மண்ணாகி மறையும்.

★ ★ ★

* Sir Walter Scott எழுதிய Breathes there the Man with Soul so Dead என்ற ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# இயமன் - சமதர்மவாதி

வெண்பா

உருவில் நிழலென் றுலகறிந்தோர் ஓதும்
பெரும்பதவி கீர்த்தி பிறப்பு — விரைவில்
விதிமுன் தலைகுனியும் வேடங்கள், மேலும்
நதிமேற் குமிழிகளை நம்பு.

பதவி, கீர்த்தி, பிறப்பு என்பன விதிமுன் தலைகுனிவன. இவை நிழல், நீர்க்குமிழி போன்று நிலையில்லாதன. (1)

கட்டியங்கோல் மௌலியுளார், கல்வியின்றி மண்வெட்டி
வெட்டரிவாள் கையேந்தும் மேன்மையுளார் — கெட்டவர்கள்
நன்றுடையார் யாரினதும் நல்லுடல்கள் மண்ணினிலே
சென்றவுடன் ஒன்றே தெரி.

இறந்தபின் மண்ணுடன் மண்ணாகச் சேரும்பொழுது, அரசன், விவசாயி, தீயவன், நல்லவன் எல்லோரும் ஒரே தன்மையினராகிவிடுவர். (2)

எவ்வா றிருந்தாலும் ஏற்ற நரம்பெல்லாம்
அவ்வாறே யுக்கி அவன்முன்னர் — எவ்வாறோ
மூச்சும்நின் றேபோகும் முற்கீர்த்தி தான்செல்லும்
ஏச்சும் பழிப்பும் எழும்.

நல்ல உடற்கட்டுடனிருந்தாலும், இயமன் முன்னிலையில் மூச்சு நிற்கும், கீர்த்தி மறையும், ஏச்சும் பழிப்பும் எழும். (3)

புகழ்மாலை வாடும் புனைவுபெறும் வீரம்
இகழ்வடையுங் காலன்முன் எங்கும் – தகவில்லாச்
செய்கை சிறப்பிழக்கும், தேசத்தில் நீதியுளான்
செய்கை நிலைக்குஞ் செழித்து.

இயமன் முன்னிலையிற் புகழ், வீரம் என்பன மறையும். தரமற்ற செயல்கள் சிறப்பிழக்கும். நீதி நியாயமுள்ளவர்களின் செய்கைகளே நிலைத்திருக்கும். (4)

* James Shirley எழுதிய Death the Leveller என்ற ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# அவனும் அவையும்

## நாமும் மெய்ப்பொருளும்

வெண்பா

எப்பொருளை யார்யார்வாய்க் கேட்டாலும் அப்பொருளில்
மெய்ப்பொருளைக் காண்ப தறிவென்றே — ஒப்பில்
வரைபொழியும் ஆறுநிகர் மாண்டகுறட் பாவில்
வரைந்திட்டார் வள்ளுவனார் மன்.

எவர் எவற்றைச் சொன்னாலும், அவற்றில் மெய்ப்பொருளைக் காணவேண்டுமெனத் திருக்குறளில் வள்ளுவர் கூறியிருக்கின்றார். (1)

விருத்தம்

சிறியவர் வயதி லென்றுஞ்
சிறியவர் குலத்தி லென்றும்
வறியவர் பதவி யில்லோர்
வசையினை யுடையா ரென்றும்
அறிவிலா மனித ரெல்லாம்
அகற்றியே அவர்கள் பேச்சைச்
சிறியவர் சொல்லி லென்ன
சிறப்புக விருக்கு மென்பார்.

வயதிற் சிறியவர், குலத்தில் இழியவர், வறியவர், பதவியற்றவர் முதலியோருடைய சொற்களை ஏற்க, மக்கள் தயங்குகின்றனர். (2)

தனிவழி செல்வோன் தன்னைத்
தடுத்திடச் சிறியோன் எண்ணி,
"இனியிதிற் செல்ல வேண்டாம்
ஏனெனில் இரவிற் கள்வர்
தனிமையிற் செல்வோர் தம்மைத்
தாக்குவர், திருட்டுஞ் செய்வர்
மனிதனே திரும்பி வேறு
வழியினுற் செல்வாய்," என்றுல்.

*இவ்வழியால் இருட்டு நேரத்திற் சென்றுல், திருடரால் அபாயமுண்டு என ஒரு சிறியவன் கூறுகிறுனென எடுத்துக்கொள்வோம். (3)*

இப்படி அறிவே யில்லான்
இயம்பினுன் என்றே யெண்ணி
அப்படிச் செல்லின், தீமை
அண்மையில் வந்தே தீரும்;
ஒப்பிலாப் பெரியோன் வந்தே,
"உவகையே யளிக்குங் கள்ளுத்
தப்பிலா நன்மை யியுந்
தயவுடன் குடித்துச் செல்வாய்."

*அறிவிலான் கூறினுனென எண்ணி, அவ் வழியாற் செல்லின், ஆபத்து வந்தே தீரும். ஒரு பெரியோன் வந்து, "ஆனந்தம் அளிக்கும் மதுவை அருந்திச் செல்வாயாக," என்று கூறுகிறுனென எடுத்துக்கொள்வோம். (4)*

என்றதும் நம்மிற் பார்க்க
இவனனு பவத்தில் மிக்கான்
என்றுமே தீமை செய்ய
எண்ணிட மாட்டா னென்று
நன்றியோ டங்குச் சென்று
நல்கிய கள்ளை யுண்பின்
கொன்றிடு மதுவும் ஆங்கே
கொடுமையே செய்யு மம்மா!

அனுபவமுள்ள பெரியோன், தீமை செய்ய நினைக்க மாட்டான் என எண்ணி, மதுவைக் குடித்தாற் கொடுமையே கொடுக்கும். (5)

சிறியவன் சொற்கே ளாது
தெருவினிற் சென்றே எல்லாம்
பறிகொடுத் தவரும், நல்ல
பண்புளான் என்று நம்பி
வெறிகொள மதுவை யுண்டு
வீடுசென் றவரும், நல்ல
நெறிகளைப் படித்துங் கேட்டும்
நெஞ்சினிற் பதியா தோரே!

சிறியவனுடைய சொல்லைக் கேளாது, பொருள்களைப் பறிகொடுத்தவனும், பெரியவனுடைய சொல்லைக் கேட்டுக் கள்ளுண்டவனும் நன்னெறிகளைக் கற்றுணராதவரே. (6)

வேறு

பன்னகம் வைத்திருக்கும் மாணிக் கத்தைப்
பயனில்லை என்றுநாம் பகரு வோமா?
தென்னையிலே ஊறிவருங் கள்ளை நன்கு
தித்திக்கும் உண்கவெனச் செப்பு வோமா?
செந்நெல்லிற் செறிந்திருக்கும் பதரைப் பார்த்துச்
சீருடைய பொருளென்று சிறப்பிப் போமா?
இன்னியநற் தாமரையைச் சேற்றிற் தோன்றும்
இழிவுடைய தென்றுநாம் இயம்பு வோமா?

நாகபாம்பிலிருந்து வந்தாலும், மாணிக்கம் விலையுயர்ந்தது. தென்னையிலிருந்து எடுத்தாலும், கள் தீமை கொடுப்பது. நெல்லுடனிருந்தாலும், சப்பட்டை உதவற்றது. சேற்றிற் தோன்றினாலும், தாமரை அழகானது. (7)

* * *

# பாரதியுஞ் சமுதாயமும்

விருத்தம்

பாரதி கனவு கண்ட
பாரத சமுதா யத்திற்
பாரத நாட்டு மக்கள்
பலருமே ஒன்றே யென்ருன்,
வீரமாய் உரமாய் நின்று
மெய்ப்பொது வுடைமை தன்னைப்
பாரெலாங் கேட்கச் சொன்ருன்
பாரதி பாட்டின் மன்னன்.

பாரத சமுதாயத்திற் பாரத மக்களெல்லாஞ் சமமானவர் என்று பாரதி பொதுவுடைமைக் கொள்கையைக் கூறிஞன். (1)

கனியுடன் அரிசி காய்கள்
கணக்கிலா திருக்கும் நாட்டிற்
தனியொரு மனித னுக்குச்
சாப்பிட வுண்க ளின்றேல்
மனிதனே எழடா! இன்றே
மண்ணினை யழிப்போம் வாடா!
இனியொரு விதிசெய் வோமே
இனியதைக் காப்போம் என்ருன்.

கனியுங் காயும் நெல்லும் நிறைந்துள்ள நாட்டிலே, தனியொருவனுக்கு உணவில்லையெனிற் சகத்தினை அழித்து விடுவோம் என்று பாரதி சொன்ஞன். (2)

★

# வள்ளுவனும் வானும்

விருத்தம்

மைக்காள முகிலினது மகவே யாய
    மழையதனை அமிழ்தெனவே மக்கள் போற்ற
எக்காலும் உயிர்க்கெல்லாம் இன்உண வுயும்
    இளம்பயிரை உயர்விக்கும் இயல்பு வாய்ந்துந்
திக்கெங்கும் பசிகளையுந் திறன்கள் கொண்டுந்
    திசையெங்கும் உழவுதொழில் சிறக்கச் செய்துந்
துக்கமுடன் வறுமையெலாந் துள்ளி யோடச்
    சுகமீந்து துலங்கிடவே துணையாய் நிற்கும்.

கார்முகிலின் சிசுவாகிய மழையை மக்கள் போற்ற, அது உயிர்களுக்கும் பயிர்களுக்கும் உணவாகி, பட்டினியை நீக்கி, விவசாயத்தைச் சிறப்பித்து, வறுமையுந் துயரமும் நீங்கத் துணைபுரியும். (1)

மங்குலது தரமறுப்பின் மழையை யென்றும்
    வளமான பசும்புற்கள் வாடக் காண்போம்,
வங்கமெறி கடல்களெலாம் வற்றக் காண்போம்,
    மக்களெலாங் கடவுளையும் மறக்கக் காண்போம்,
தங்கமென மனிதரெலாஞ் சாற்றுந் தானந்
    தவமிரண்டுந் தரணிதனிற் சாகக் காண்போம்,
பங்கயமும் இயற்கையெழில் பலவும் எங்கும்
    பாழாகிச் சிதைந்துவிடல் பாரிற் காண்போம்.

மழையில்லாவிட்டாற் புற்தரைகள் வாடும், கடல் வற்றும், மக்கள் கடவுளை மறப்பர், தானமுந் தவமும் படியும், இயற்கை அழகும் அழிந்தொழியும். (2)

★

# கவிஞனுங் கவிதையும்

விருத்தம்

துறைதுறை யாகச் சென்று
　　தூயநல் லொளியை வீசும்
இறைநிகர் கவிஞன் ஏனோ
　　இசைக்கிறன் பாடல் என்று
முறைமுறை யெண்ணி என்னுள்
　　மூளையை விட்டே நிற்கக்
குறைவிலாப் புலவன் யாரோ
　　கோதிலிவ் விடையைத் தந்தான்.

*எல்லாத் துறைகளிலும் அறிவொளியை ஈயும் புலவன், ஏன் பாடுகின்றான்? என எண்ணி நிற்கும்பொழுது. ஒரு புலவனே விடையளிப்பது போன்ற உணர்ச்சி எனக்குண்டாயது.* (1)

பலாவதின் சுளையை யுண்டு
　　பாடிடும் பறவை போல;
நிலாவினை மீனத் தோடு
　　நேர்பட ஒன்றாய் நோக்கிக்
குலாவிய கவிஞன், உள்ளங்
　　குளிர்ந்தெழுந் தொளிர, அங்கே
உலாவியே கவிதை பாடின்
　　உண்மையில் வியப்பேன்,'' என்றான்.

*பலாச்சுளையை உண்டு பாடும் பறவை போலச் சந்திரனையும், விண்மீன்களையுங் கண்டு மகிழ்ந்த கவிஞனின் உள்ளம் குளிர்ச்சியடையும்பொழுது, அவன் கவிதை பாடுவதில் வியப்பு ஏதும் உண்டா? என்றான் புலவன்.* (2)

தூயதாய்த் துலங்கு இன்ற
சுவைபெறும் இயற்கைக் காட்சி
சேயதாய் அறிவுக் கெட்டாச்
சின்னமா யிருக்கும் போது,
''காயெரி கனலுங் கற்கள்
கள்ளுடை மலராம்,'' என்று
மாயமாய்க் கம்பன் சொன்ன
வார்த்தையில் உண்மை யுண்டா?

இயற்கையானது அறிவுக்கு எட்டாததாயிருக்கும் பொழுது, ''கொதிக்குங் கற்கள் தேனுள்ள மலராக மாறின,'' என்னுங் கம்பன் வார்த்தையில் உண்மை யுண்டா? என எண்ணினேன். (3)

''பொருள்களின் மேலே யென்றும்
புலவனின் கண்கள் வீழ்ந்தால்
அருளினுல் வந்த வாறே
அவையெலாம் அழகாய்த் தோன்றும்,
இருளிலே மயங்கி மக்கள்
இருக்கிற படியா லன்றே
பொருளெலாம் இராப்பூப் போலப்
புரிவதே யில்லை,'' யென்றான்.

புலவனின் கண்களுக்கு எவையும் அழகாகத் தோன்றும். மக்கள் இருளில் இருக்கின்றபடியாற்தான், அந்த அழகு அவர்களுக்குப் புரிவதில்லை, என்றான் புலவன். (4)

"அழகெனும் உணர்ச்சி யென்றும்
அழகுணர் புலவன் கண்ணிற்
கொழுந்துபோல் ஒளியை வீசிக்
குலாவியே ஓங்கி நிற்கும்,
மழுங்கிய உங்கள் மூளை
மாண்புடன் மிளிரு மாயின்
எழுந்திடும் இயற்கை யான
எழிலுறுங் கவிகள்,'' என்றான்.

அழகுணர்ச்சி புலவனின் கண்களில் இருக்கின்றது. இருளடைந்த மக்களின் உள்ளம் ஒளிபெறுமாயின், அவர்களுங் கவிதையெழுதலாம், என்றான் புலவன். (5)

★ ★ ★

# அலை

## காதலும் ஒளியும்

வெண்பா

பார்ப்போம் இரவிற் பலகண்கள் என்றுலும்
பார்ப்பதொரு கண்ணே பகலினிலே — பார்ப்போமே
சூரியனுஞ் சென்றவுடன் சூழுமொளி நீங்கிடவே
பாரிற் பரக்க இருள்.

இரவிற் பலகண்கள் (சந்திரனும், விண்மீன்களும்) இருந்தாலும், பகலில் ஒரு கண் (சூரியன்) மட்டுமே இருக்கின்றது. சூரியன் மறைந்ததும், ஒளி நீங்கி, இருள் பரவுகின்றது.. (1)

காண்போம் மனத்திற் கனகண்கள் என்றுலுங்
காண்ப திருதயத்திற் கண்ணென்றே — காண்போமே
காதலில்லை யாயின் கரைந்துமே வாழ்வினொளி
சாதற் துயரைத் தர.

மனத்திற்குப் பல கண்கள் (நட்புகள்) இருந்தாலும், இதயத்திற்கு ஒரு கண் (காதல்) மட்டுமே இருக்கின்றது. காதல் மறைந்ததும், வாழ்வொளி நீங்கித் துயரம் பரவுகின்றது. (2)

★

* F. W. Bourdillon எழுதிய Light என்ற கவிதையின் தழுவல்.

# வெள்ளைப் பூனை

இராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

வெள்ளை நிறமுடைய பூனை — எங்கள்
 வீட்டி லிருக்குதடி பாப்பா
அள்ளி அணைத்தவுடன் "யாங்யாங்" — என்றே
 அலறிக் குதிக்குமடி பாப்பா. (1)

வாலை யசைத்தசைத்து நின்றே — பூனை
 வாயை யசைத்தசைத்து நக்கி
நாலு புறத்துடலுஞ் சுத்தஞ் — செய்தே
 நலமுடன் பேணிவரும் பாப்பா. (2)

மீனை இறைச்சிகளைக் கண்டால் — அங்கே
 "மியா"வென்றே ஓலமிட்டுக் கொண்டு
தேனைச் சுவைக்கவரும் ஈபோல் — எங்குந்
 திரிந்து சுழன்றுவரும் பாப்பா. (3)

அல்லில் எலிபிடிக்கும் பாப்பா — ஆசை
 அன்பன் அதற்கொருநாய்க் குட்டி
மெல்ல அதனுடலில் ஏறி — மேலே
 மிகவினி தாய்த்துயிலும் பாப்பா. (4)

கண்மணி ! நீநல்ல பாப்பா — பாரிற்
 காணக் கிடையாத பூனை
உண்மை அழகான பூனை — அன்பாய்
 உனக்குத் தருகின்றேன் பாப்பா. (5)

# வானொலி

வெண்பா

பத்திரிகை மூலம் பகிரங்க மாவதன்முன்
அத்தினமே செய்தி அளிப்பதனால் — இத்தரையில்
வானொலிகள் மக்கள் மதிப்பைப் பெறுகின்ற
தேனென்றே நன்றாகச் செப்பு.

*பத்திரிகைகளில் வெளிவருமுன், வானொலிகள் செய்திகளை ஒலிபரப்பி, மக்கள் மதிப்பைப் பெறுகின்றன. (1)*

நூலிற் படித்து நுகர்வவெல்லாம் மாண்பல்ல
வாலறிஞர் கீழ்க்கற்றல் மாண்பென்னுஞ் — சாலுஞ்
சொலிற்கிணங்கப் பேரறிஞர் சொற்பொழிவை ஈந்து
நலமுறுத்தும் நாட்டிற்கே நம்பு.

*வாசித்தறிவதிலும் பார்க்கக் கேட்டறிவதே மாண்பு என்பதற்கிணங்க, அறிஞரின் சொற்பொழிவுகளை வானொலி ஒலிபரப்பி மக்களுக்கு நன்மை செய்கின்றது. (2)*

கைத்தொழிலே விஞ்ஞானக் கல்வி இலக்கியத்தை
எத்திசையும் வானொலிகள் ஈவதினாற் — சித்தமதிற்
தக்கவற்றை ஏற்றுத் தனிமுறையிற் சீவித்து
மக்கள் அடைவாரே மாண்பு.

*கைத்தொழில், விஞ்ஞானக் கல்வி, இலக்கியம் முதலியனவற்றை வானொலியிற் கேட்டு, மெய்ப்பொருள் உணர்ந்து, மக்கள் பெருமையடைகின்றனர். (3)*

தம்மொழியைத் தாரணியிற் றன்னிகரின் றென்றுரைத்துத்
தம்முட் செருக்கடையுந் தன்மையினர் — அம்மொழியை
மற்றும் பலமொழியை வானொலியிற் கேட்டவுடன்
அற்றேபோம் அப்பெருமை அன்று.

தனது மொழி மட்டுமே நிகரற்றது எனச் செருக்கடைவோர், பலமொழிகளை வானொலியிற் கேட்டவுடன் செருக்கு நீங்குவர். (4)

காலை முழுதுங் கடுமுழைப்பால் மெய்சோர்ந்து
மாலையிலே நித்திரைசெய் மக்களுக்குப் — பாலெனவே
பாட லிசையைப் பருக்கிடவே வானொலிகள்
ஓடுமுடற் சோர்வே ஒழிந்து.

பகல் முழுவதும் உழைத்துக் களைத்து இரவில் நித்திரை செய்பவருக்கு, வானொலியில் வரும் இசை நிகழ்ச்சிகள் உடற்சோர்வை நீக்குகின்றன. (5)



# அணுவும் மதுவும்

விருத்தம்

தவமதனை வழுவாது
தைரியமாய்க் கடைப்பிடித்துத்
தனியாய் வாழ்ந்தே
அவனின்றி அணுத்தானும்
அசைந்திடா தெனவுரைத்தான்
அற்றை ஞானி,
அவனியிலே யுளவெவையும்
அணுச்சக்தி துணைக்கொண்டே
அசைப்போ மென்று
நவயுகத்திற் பெருமையொடு
நாடோறும் நவில்கின்றான்
நவ்விஞ் ஞானி.

தவம்செய்த ஞானி அவனின்றி அணுவும் அசையாது என்கின்றான். ஆனால், விஞ்ஞானியோ அவனையும் அணுச்சக்தியால் அசைப்போம் என்கின்றான். (1)

சென்றபெருஞ் செருவினிலே
செருக்குடைய யப்பானின்
செழித்த நாட்டை
ஒன்றிற்கும் உதவற்ற
ஒரூராய் அணுக்குண்டால்
ஒடுங்கச் செய்தும்,
இன்றைக்குப் பெருநகராய்
எழில்பெற்று மறுமுறையும்
எழுந்த தோடு
குன்றனைய வலிமையெலாங்
கொளமக்கள் நல்வளங்கள்
கொழிக்கு மன்றே.

இரண்டாம் உலக யுத்தத்திலே, யப்பான் நகரம் அணுக்குண்டால் அழிந்திருந்தும்; அது இன்று திரும்பவும் வளமுள்ள நாடாகத் திகழ்கின்றது. (2)

நெருப்பு,நீர் மனிதனது
நிலையிலுட லழித்துயிரை
நீங்கச் செய்யும்,
அருவருக்கும் மதுவென்றால்
ஆத்மாவை யேயழிக்கும்,
ஆத லாற்றான்
பெருமைநிறை இராவணனும்
பேராண்மை அரக்கரெலாம்
பெருமை நீங்கித்
தருவிழக்க மதுவேசெய்
ததுவெனவே நன்கறிமின்
தரணி மீதே.

நெருப்பும் நீரும் நிலையற்ற உடலை அழிக்கும். ஆனால் மது ஆத்மாவையேயழிக்கும். இராவணனையும், அரக்கரையும் மதுவே அழித்தது. (3)

வலிமைபெறு மக்களையும்
வளமைமிகு நாட்டினையும்
மயக்க வெண்ணி,
எலிபுலியைச் செருவொன்றில்
இறந்தொழியச் செய்வதுபோல்,
ஏங்கச் செய்யுங்
கலிபோன்ற அபினியினைக்
கைதேர்ந்த ஐரோப்பாக்
கயவ ரீந்து,
வலியிழந்தே அடிமைகளாய்
மதிசிதைந்து சீனவை
மடியச் செய்தார்.

எலி புலியை வெல்வதுபோல, முன்பொருநாள் ஐரோப்பியர் அபின் என்னும் மதுச்சத்தின் துணையால், சீனவை அடிமையாக்கினர். (4)

மதுவதனுல் மடிந்தார்கள்
மன்னவரும் மாநிலத்தார்
மற்றும் பல்லோர்,
மதுவிற்குப் பூமிதனை
மாய்ப்பதல்லால் உய்விக்கும்
மகிமை யில்லை;
நிதிவளங்கள் பற்பலவும்
நீள்தரணிக் கணுச்சக்தி
நிறைய ஈயும்,
இதனின்றும் அணுச்சக்தி
எதனையுமே ஆக்குமென
எளிதிற் தோன்றும்.

*மன்னரும், மனிதரும் மதுவாற் சிதைந்தனர். மது அழிக்குமேயொழிய, ஆக்கும் ஆற்றல் அற்றது. அணுவுக்கு அழிக்குஞ் சக்தி மட்டுமன்றி, ஆக்கும் ஆற்றலும் உண்டு.* (5)

ஆதலினுல் நாமெல்லாம்
அணுச்சக்திக் கிடங்கொடுத்தே
அரச பீடம்,
வேதனையை யீந்துவரும்
விண்மதுவை விட்டொழிக்க
வெம்போர் செய்து,
தீதிழைக்கும் மதுக்கடைகள்
சிதைந்தொழிய மூடுவிழாச்
சிறப்பாய்ச் செய்து
பாதகமே நினையாத
பலபெரியோர் பாரினிலே
பரவக் காண்போம்.

*ஆதலால், அணுச்சக்திக்கு முதலிடம் அளிப்போம். மதுவுக்கு எதிராகப் போர் புரிந்து, மதுக் கடைகளுக்கு மூடுவிழாக்கள் செய்து, பல பெரியோரை உலகில் உதிக்கப் பண்ணுவோம்.* (6)

# இலட்சிய வாழ்க்கை

விருத்தம்

ஒளியிலாத் தீபம், தென்றல்
உலவிடாச் சோலை, நீர்பெற்
றொளிர்ந்திடா ஆழி, இன்ப
ஒலிதரா நாத யாழ்போல்
இளமையிற் தொடங்கிப் பாரில்
இலட்சிய வாழ்க்கை யின்றி
விளங்கிடா மனிதர் யாரும்
விலங்கினை நிகர்ப்ப ரன்றோ !

இலட்சியமின்றி வாழ்பவர் ஒளியற்ற விளக்கையும், நீரற்ற கடலையும், நாதமற்ற இசைக்கருவியையும் நிகர்ப்பர். (1)

பற்பல நாட்டை யெல்லாம்
படைகளால் வென்று, தங்கள்
சொற்படி நடத்த வெண்ணுந்
துணைமிகு மன்னர்க் குண்டோ
நற்பெருங் குறிக்கோள் ? சேர்த்து
நாளெலாம் பணத்தை வைக்கும்
அற்பனும் உலோபிக் கஃதோர்
அரும்பெருங் குறிக்கோ ளாமோ ?

போர் முனையில் நாடுகளை வென்று அடிமைப்படுத்தும் மன்னருக்கும், பணத்தைச் சேர்த்துக் குவிக்கும் உலோபிக்கும் இலட்சியம் உண்டா? (2)

இப்படி வாழ்த லின்றி
இலட்சிய வாழ்க்கை நின்ற
தப்பிலாப் பெரியோர் தம்மின்
தனிப்பெரும் வாழ்க்கை பற்றி,
அப்பெரும் மனித ரீந்த
அரும்பெரும் நூல்கள் கற்றுத்
துப்புடன் வாழ்தல் நன்றே
துன்பமே நேர்ந்த போதும்.

இலட்சிய வாழ்க்கை நடாத்திய பெரியோரின் வாழ்க்கையையும், அவரெழுதிய நூல்களையும் படித்தறிந்து, எல்லோரும் நன்கு வாழவேண்டும். (3)

பணப்பலஞ் சிறிது மில்லைப்
பாரினில் வாழும் மக்கள்
துணைப்பல மில்லை யென்று
சொல்வது நினைப்ப தெல்லாம்,
உணர்விலா மக்கள் பேச்சென்
றுரைத்திட உலகோர்க் கெல்லாம்
குணப்பெரும் மனிதர் வாழ்வைக்
கூறுவேன் மேலே, கேண்மின்!

பணப்பலமும் மக்கள் துணையும் இல்லையென நினைப்பது கோழைத்தனம் என்பதை எடுத்துக்காட்டச் சில பெரியோரின் வாழ்க்கையைக் கூறுகின்றேன், கேட்பீர்களாக! (4)

கொடைமிகு சடையப் பர்நங்
கூலியாட் போல வாழ்ந்தும்
அடைந்தனன் கவிமன் னாக
அரும்பெரும் புலவன் கம்பன்,
கொடுத்திடும் பணத்திற் காகக்
குதிரையைக் காத்து வந்துங்
கடைசியிற் செகப்பி ரியர்
கல்வியிற் பெரியோ ராஞர்.

*கூலியாளாக வாழ்ந்த கம்பன், கவி மன்னனாகத் திகழ்ந்தான். குதிரைகளைக் காத்துப் பணம்பெற்ற செகப்பிரியர் (Shakespeare) கல்விக் கடலாக விளங்கினான். (5)*

உடுப்பதற் காடை யின்றி
உண்பதற் குணவே யின்றி
அடுப்பினின் வெளிச்சந் தன்னில்
அளப்பரும் இரவல் நூல்கள்
படித்துமே அமெரிக் காவின்
பார்புகழ் முதல்வ னாக
அடைந்தனன், அடிமை வாழ்வை
அகற்றிய லிங்கன் பாரீர்.

*நல்ல உடையின்றி, உணவின்றி, அடுப்பு வெளிச்சத்தில் இரவல் நூல்கள் கற்ற ஆபிரகாம்லிங்கன், அமெரிக்காவின் முதல்வனானான். (6)*

சித்திரந் தீட்டி வாழ்ந்துஞ்
செருமனி நாட்டின் மன்னுய்
வித்தகன் ஹிட்லர் வந்தான்,
வெறுத்திட மக்க ளெல்லாம்
பொத்திய கந்தை யோடு
போவதற் கிடமே யின்றி
அத்தினம் நிரப்பில் வாழ்ந்தும்
அறிஞனுய்ப் பெணுட்ஷா வந்தான்.

சித்திரந்தீட்டி வாழ்ந்த ஹிட்லர் (Hitler) செருமனியின் (Germany) முதல்வனுனுன். கந்தையுடுத்து வறுமையில் வாழ்ந்த பெர்ணுட் ஷா (Bernard Shaw) ஒரு பெரிய அறிஞனுனுன். (7)

கல்லொடு முட்கள் தம்மைக்
கண்டுமே அஞ்சா தம்பு
வில்லினுற் தாக்கி னுலும்
விசயனுய்ப் பொருது வென்று
செல்லல்நோய் குறுக்கிட் டாலுஞ்
செல்வழி விரைவாய்ச் சென்று
நல்லவோர் குறிக்கோ ளோடு
நாமெலாம் வாழ்தல் வேண்டும்.

கல், முள், அம்பு, வில் முதலியனவற்றிற்கு அஞ்சாது. வறுமைக்கும் பயப்படாது, எல்லோரும் இலட்சிய வாழ்க்கை நடாத்தவேண்டும். (8)

★ ★ ★

# முகிலின் சுயசரிதை

விருத்தம்

நீடிய வெயிலின் கண்ணே
    நிலைவெலாம் இழந்து தூங்கி
ஆடிடும் இலைக ளோங்க
    அரியநல் நிழலை ஈவேன்,
வாடிடும் மலர்க ளோங்க
    மருந்தெனத் திவலை ஈவேன்,
நாடிடும் உயிர்கள் யாவும்
    நலம்பெற மழையை ஈவேன்.

வெயிலிற் தூங்கிவிழும் இலைகள் ஓங்க, நிழல் கொடுப்பேன். வாடும் மலர்கள் ஓங்க, மழைத்துளிகள் சிந்துவேன். உயிர்களை உய்விக்கப் பெருமழை தருவேன். (1)

வண்டது மலரைச் சுற்றும்
    வகையெனப் பசுமை யாம்பூ
மண்டலம் பகலோன் முன்றல்
    மகிழ்வுடன் ஆடும் போது,
கண்டங்கள் பலவும் ஆலங்
    கட்டியைச் சொரிந்து சென்று
கண்டரும் வெண்மைப் பூமி
    காணநான் செய்கு வேனே.

வண்டு மலரைச் சுற்றுவதுபோல், பூமி சூரியனைச் சுற்றும்பொழுது, நான் பனிக்கட்டிகளைப் பெய்து, பூமியை வெண்மை நிறமாக்குவேன். (2)

உயர்ந்தநல் மலைகள் மேலே
உறைபனிக் கட்டி தூவி
வயத்தலை யணையே யாக்கி
வலிமிகு வளியின் கையிற்
துயரறத் தூங்க யானும்,
துரிதமாய் மயில்க ளாடும்
பயத்திறுற் குயில்கள் வாடும்
பாரினிற் பயிர்க ளோங்கும்.

*மலைகளின் மேல் பனிக்கட்டிகளைத் தூவி, அவற்றைத் தலையணையாக்கி, காற்றின் கையிலே நான் படுத்துறங்கையில், மயில்கள் ஆடும், குயில்கள் வாடும், பயிர்கள் ஓங்கும்.* (3)

மின்னலென் ஆறு காட்டி,
வியத்தகும் இடியே றென்றன்
பன்னரும் மறியற் காரன்,
பாரினிற் பண்டு மின்றும்
மின்னலைக் கண்டு கைதி
வெருவியே அலறுங் காலை
இன்னிய உலகி லுள்ளோர்
இடிவெடி முழக்க மென்பார்.

*மின்னல் எனது வழிகாட்டி. இடியேறு எனது கைதி. மின்னலுக்குப் பயந்து எனது கைதி அலறுவதையே, மக்கள் இடிமுழக்கம் என்பர்.* (4)

சக்கர வடிவ மான
　　சந்திரன் மக்கள் காணு
மிக்கதன் னடிக ளாலே
　　வியப்புற நடப்பான் என்மேல்,
திக்குறை விண்மீன் யாவுஞ்
　　சிதைந்திடின் என்றன் கூரை
அக்கணம் பூமி தன்னை
　　அகங்களித் தெட்டிப் பார்க்கும்.

கண்ணுக்குப் புலப்படாத தனது பாதங்களினுல் வெண்மதி என்மேல் நடக்கும். என் கூரை பிரிகின்ற நேரங்களில், விண்மீன்கள் மகிழ்வுடன் பூமியை எட்டிப் பார்க்கும். (5)

பூமியுங் கடலு மீன்ற
　　பொருவிலாப் புதல்வ னென்னைத்
தாமநல் விசும்பு நல்ல
　　தாதிபோற் காக்க வென்றும்,
பூமிமேல் மழையாய்ச் செல்வேன்
　　புகழுடன் முகிலாய் மீண்டும்
மாமணிக் குடையே போல
　　மகிழ்வுடன் நிழலை ஈவேன்.

மண்ணுக்குங் கடலுக்கும் பிறந்த என்னை, விண்வெளி தாதியாகப் பேணுகின்றது. நான் மழையாக மண்ணுக்குச் செல்வேன். பின்னர் முகிலாக மாறி, மணிக்குடை போல் நிழலைக் கொடுப்பேன். (6)

★ ★ ★

Percy Bysshe Shelley எழுதிய From The Cloud என்ற ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# புத்தரின் பொன்மொழிகள்

விருத்தம்

வீட்டினின் கூரை தன்னை
வேய்ந்திடா திருப்பின், அந்த
வீட்டினுள் மழைநீர் வந்து
வீழ்ந்திடல் போல; இந்த
நாட்டினி லுள்ளோர் யார்க்கும்
நன்னெறிப் பயிற்சி யின்றேல்
வாட்டிடும் ஆசை வந்து
மனத்தினுட் புகுந்தே தீரும்.

கூரையில்லா வீட்டினுள் மழைநீர் வீழ்வது போல, நன்னெறிப்பயிற்சி இல்லாதோர் மனத்தினுள் ஆசைகள் புகுந்துவிடும். (1)

நிலைபெறுஞ் சித்தம் அற்றோர்,
நேரிய தர்மம் இன்றி
அலைபவர், நல்ல சாந்தி
அகத்தினில் இல்லோர் யார்க்கும்;
பலபுகழ் இருட்டிட் டாலும்,
பண்புகள் மிகுந்த மாண்ட
விலையிலாப் பூர்ண ஞானம்
விரைவினிற் கிட்டா தம்மா!

*நிலையில்லாத சித்தம் உடையவரும், உண்மையான தர்மத்தை அறியாதவரும், மனத்திலே சாந்தியில்லாதவரும், பூரண ஞானத்தைப் பெறமாட்டார்.* (2)

நல்லவோர் எண்ணத் தோடு
நாவினுற் பேசின், சான்ற
வல்லநற் செயல்கள் செய்யின்;
மனிதனைத் தொடர்ந்தே யென்றுஞ்
செல்லுமெவ் விடங்க ளெல்லாஞ்
சென்றிடு நிழலே போலப்,
பல்லுயிர் போற்றும் இன்பம்
பண்புளா ரோடு செல்லும்.

நல்ல எண்ணத்துடன் பேசினுல், நற்செயல்கள் புரிந்தால்; மனிதனை நிழல் தொடர்வதுபோல, இன்பமுந் தொடர்ந்து செல்லும். (3)

வெள்ளமே போல ஆசை
மிகுந்திடும் உலகந் தன்னில்;
உள்ளத்து மாசு நீக்கி
உயர்வுறும் ஒழுக்கம் நின்றே
அள்ளவுங் குறையா உண்மை
அடக்கமாம் நெறியில் வாழுங்
கள்ளமில் லிதயோன் மட்டுங்
காவியை யுடுக்க வல்லான்.

ஆசைகள் நிறைந்த உலகத்திலே; மனமாசுகள் அகற்றி, நல்லொழுக்கம், உண்மை, அடக்கம் முதலிய நன்னெறிகளில் நிற்குஞ் சுத்தமான இதயம் உடையவன் மட்டுமே காவியுடை அணிவதற்கு உரிமையுள்ளவன். (4)

## கிறீஸ்துவின் அறிவுரைகள்

இராகம் : சம்க்ரந்தனப்ரியா                    தாளம் : ஆதி

பல்லவி

கன்னத்தின் வலப்பக்கம் உன்னித்தான் அடித்தாலும்
மன்னித்து மகிழ்வோடு மறுகன்னங் கொடுவென்ருர்
(கன்னத்)

அனுபல்லவி

எல்லோரும் இவ்வுலகில் வலக்கையாற் கொடுப்பதனை
இடக்கையும் அறியாமல் இருக்கட்டும் என்ருரே (கன்னத்)

சரணம்

நேராக வாழ்வெல்லாம் நெறியோடு வாழ்வோர்கள்
தாரணியிற் தட்டுஞற் கதவு திறந்திடுமே,
சீராகத் தேடுபவன் சிறப்புடன் கண்டடைவான்,
ஊபருல கிற்கேட்பின் பெற்றிடுவான் என்ருரே. (கன்னத்)

* * *

## இராமக்கிருஷ்ண பரமஹம்சரின் திருமொழி

விருத்தம்

தராசினைப் பாரீர்! அந்தத்
தட்டினிற் பாரம் ஏறத்
தராசதின் தட்டுக் கீழே
தாழ்ந்திடும்; அதனைப் போலத்
திருமையுங் குணமும் உள்ளான்
சீருடன் பணிவாய் வாழ்வான்,
பெருமைகொள் மூடன் கர்வம்
பேரகம் பாவங் கொள்வான்.

# ஸ்ரீ சத்ய சாயிபாபா திருவாய் மொழிகள்

விருத்தம்

கோபம்வந் துற்றால், ஈசன்
கோயிலிற் றனியே சென்று
தீபம்முன் தொழுக, இன்றேல்
தேவன்மேல் இசைப்பீர் கீதம்
மாபெருங் குரலில், இன்றேல்
மாடியில் விரித்துப் பாயை
நீபெருங் கோபம் நீக்க
நித்திரை கொள்வீ ராக !

கோபம் வந்தாற் தனிமையாகக் கோயிலுக்குச் சென்று, தீபத்தின்முன் நின்று தொழுவாயாக; அல்லது கடவுளை நினைத்து உரத்த குரலிற் தோத்திரங்கள் பாடுவாயாக; அல்லது அறையிற் பாயை விரித்துத் துயில் கொள்வாயாக ! (1)

வேறு

முதியவாற் பேத்தையெலாம்
முதிர்ந்தவுடன் அதன்வால்கள்
முறிந்து வீழ்ந்து
புதியபல தவளைகளாய்ப்
புனர்வாழ்வு பெறுவதைப்போல்,
புவியி லுள்ளோர்
முதியநறும் ஞானத்தால்
முதிர்ந்தவுடன் மமதையெலாம்
முழுக்க நீங்கிப்
புதியபெரும் பக்குவங்கள்
பொலிவுபெறும் புண்ணியராய்ப்
புனித ராவார்.

வாற்பேத்தைகள் முதிர்ச்சியடைந்தவுடன் வால்கள் வீழ்ந்து தவளைகளாக மாறுகின்றன. அதேபோல, மண்ணிலுள்ள மக்கள் ஞான முதிர்ச்சியடைந்தவுடன் மமதை நீங்கிப் புனிதராகுகின்றனர். (2)

வேறு

குருதியை ஓட்டிடுங் கூடாஞ் சிறிய
இருதய மின்றி இயங்குமா, யாக்கை ?
திருத்தலம் அற்ற சிறுநக ரெல்லாம்
இருதயம் இல்லா உடலென லாமே !

இருதயமற்ற உடம்பு இயங்குமா ? அதே போலக் கோயிலில்லாத ஊரும் இயங்க மாட்டாது. (3)

வேறு

உன்னுடைய அனுபவமே உண்மை யாகும்,
உண்மைக்கே உத்தரவா தங்கள் ஊட்டும்,
இன்னொருவர் உனக்கியம்பும் எதையுங் கேட்டே
இசைந்துநீ நடந்திடுதல் இழுக்குக் காண்பாய்,
உன்னுடைய அனுபவம்போல் உலகில் மற்றோர்
உரைத்திடுமெவ் வனுபவமும் உயர்ந்த தன்று,
மன்னன்தன் னனுபவத்தை வழங்கி னாலும்
மதியுள்ளோர் அம்மொழிக்கும் வணக்கஞ் செய்யார்.

சொந்த அனுபவமே உண்மையானது. மற்றவருடைய அனுபவங்களைக் கேட்டு, அதன்படி நடத்தல் கூடாது. ஓர் அரசனின் அனுபவத்தைக் கேட்பினும், அதன்படி ஓர் அறிவுள்ளவன் நடக்கமாட்டான். (4)

# மழை பொழிந்தது

விருத்தம்

வெட்டி யெங்கள் கண்கள் கூச
மின்னல் வந்தி டிக்கவே
கொட்டி மேகந் தாளம் போட்டுக்
கூகூ வென்று கத்தவே
எட்டுத் திக்கி லுள்ளோர் யாரும்
ஏங்கி ஏங்கி நிற்கவே
சட்டச் சட்ட வென்று தாரை
தரணி மீது பெய்ததே.

கண்கள் கூசும் மின்னலுடனும், இடி முழக்கத்துடனும் மக்கள் ஏங்கும்படியாக மழை பெய்தது. (1)

தூசி மிக்க கோடை நாளுஞ்
சூடு மொக்க நீங்கவே
ஆசி கூறும் மக்க ளெல்லாம்
அன்புக் கண்ணீர் சிந்தவே
மோச மான சத்தத் தோடே
மோதிக் கூரை மீதிலே
தேச மெங்கும் வேக மாகத்
தேனும் மாரி வந்ததே.

தூசியுஞ் சூடுமுள்ள கோடைக்காலம் நீங்கவும், மக்கள் ஆசி கூறிக் கண்ணீர் மல்கவும், இரைச்சலுடன் கூரை மேல் மோதி மழை பெய்தது. (2)

வேறு

இலவம சோகம் வேலம்
எட்டிசிந் தூரம் வாழை
ஒலிவமி லந்தை தென்னை
ஒடையால் புன்னை பாக்கு
நிலப்பனை அத்தி புங்கம்
நெட்டிபூ வரசு மற்றும்
பலபல மரங்கள் எல்லாம்
பயந்தன மழையைக் கண்டே.

இலவம், அசோகம், வேலம், எட்டி, சிந்தூரம், வாழை, ஒலிவம், இலந்தை, தென்னை, ஒடை, ஆல், புன்னை, பாக்குமரம், நிலப்பனை, அத்தி, புங்கம், நெல்லி, பூவரசு முதலிய மரங்களெல்லாம் மழைக்குப் பயந்தன. (3)

மயில்களும் மகிழ்ந்தே யாட,
மலையின்முத் தெல்லாம் வீழக்
குயில்களும் வாட, யாளி
கொல்புலி கரடி யானை
துயில்கொளும் பறவை யெல்லாந்
துடித்தெழுந் தலற, மந்தி
மயல்கொடு மரங்கீழ் வீழ
மழைபொழிந் ததுவே யம்மா.

மயில்கள் ஆடவும், மலையின் முத்துக்கள் வீழவும், குயில்கள் வாடவும், யாளி புலி கரடி யானை பறவைகள் அலறவும், குரங்கு மயங்கவும், மழை பொழிந்தது. (4)

* * *

# கடற்கரை மாலைக்காட்சி

விருத்தம்

அழகுடன் அலைகள் வந்தே
அன்புடன் கைகள் நீட்டி
முழவுபோல் ஓசை செய்து
மோதிடக் கரையின் மீதே,
குழலின தினிய பண்ணோ
கோதையர் கிள்ளைப் பேச்சோ
குழவியின் மழலை தானோ
கூறுதற் குவமை யில்லை.

கரங்களை நீட்டி முழவுபோல் இசைத்து, அலைகள் கரையை மோதும் ஓசை; குழலிசை, இளம் பெண்களின் கிள்ளைமொழி, குழந்தையின் மழலை முதலியனவற்றிலும் பார்க்க இனியதாகும். (1)

சீருடன் அலைக ளெல்லாஞ்
சிகப்பெனக் கண்ணிற் தோன்றும்,
தூரமாய் நோக்கின் பச்சை
துலங்கிடும், அழகார் நீலம்
ஓரமாய் ஒதுங்கி நிற்கும்,
ஊர்ந்திடும் எங்கும் வெண்மை
கூரிய வாளே போலக்
கூர்ந்துநாம் கவனிப் போமால்.

கூர்ந்து கவனித்தால், அலைகள் சிகப்பாகவும், பச்சையாகவும், நீலமாகவும், வெண்மையாகவுந் தோன்றும். (2)

செந்நெலாம் பயிரின் மேலே
　　தென்றலின் கரங்கள் செல்லப்
பன்னெடும் வரிசை யாகப்
　　பலகதிர் தலையைச் சாய்க்கும்
மன்னிய காட்சி போல
　　வடிவுடன் அலைக ளெல்லாஞ்
சென்னியை யசைக்கும் விந்தை
　　செப்பிட நாவே யில்லை.

தென்றல் வீசும்பொழுது நெற் கதிர்கள் தலைகளை யசைப்பன போல, அலைகளின் தலையசைவுகளும் அழகானவை. (3)

கோட்டையைத் தகர்க்க ஏகுங்
　　கொதித்தெழு களிறு போலப்
போட்டியாய்ப் பாய்ந்து செல்லும்
　　போர்முனைப் பரிகள் போலக்
கூட்டமாய்த் துள்ளி யோடுங்
　　குதூகலச் சிறுவர் போல
ஓட்டமாய்க் கரையை வந்தே
　　உதைப்பதோர் அழகு தானே.

கோட்டையை உடைக்க யானை செல்வது போலவும், போருக்குக் குதிரைப்படை பாய்ந்து செல்வது போலவும், சிறுவர் கூட்டமாக ஓடுவது போலவும், அலைகள் ஓடி அழகுடன் கரையை உதைக்கின்றன. (4)

அடித்ததுங் கரையின் மீதே
அழகுறு துளிகள் துள்ளி
நடமிட, எறிந்த முத்தோ,
நங்கையர் கண்ணீர் தானோ,
படைகளின் துவக்கி னூடாற்
பாய்ந்திடுங் குண்டு தானோ,
விடையெதுந் தெரியா தங்கு
வியப்புற வேண்டு மம்மா.

எறியப்பட்ட முத்துக்கள் போலவும், இளம் பெண்களின் கண்ணீர்த் துளிகள் போலவும், துவக்கிலிருந்து வெளிவருங் குண்டுகள் போலவும், கரையை மோதிய அலையின் நீர்த்துளிகள் நடமிடும். (5)

போற்றிடும் படைகள் வந்து
போரினிற் தோற்றல் போலச்
சீற்றமாய் அலைகள் மோதித்
திரும்பிடக் கொணர்ந்தே யங்கு
தூற்றிய மீன்க ளெல்லாந்
துள்ளியே கரையில் வீழ்ந்து
கூற்றுவன் கையிற் சிக்கிக்
கொலையுறல் கொடுமை யன்றோ.

போரிற் தோற்ற படைகளென அலைகள் திரும்பும் பொழுது, அலைகள் கொணர்ந்து வீசிய மீன்கள் கரையில் வீழ்ந்து மடிகின்றன. (6)

கரையினிற் கிடக்குந் தெங்குக்
கனிகளை யுருட்டிச் செல்லும்;
தரையினி லிருக்குங் குப்பை
தடிகளை யெடுத்துச் செல்லும்;
திரையென மரங்கள் மேலே
திரண்டெழும், காய்கள் கிட்டின்
கரத்தினுற் பிடுங்குங் காட்சி
காணவா யிரங்கண் வேண்டும்.

கரையிலுள்ள தேங்காய், குப்பை, தடி முதலியன வற்றை அலைகள் உருட்டிச் செல்வதையும், மரத்திலுள்ள காய்களைப் பிடுங்குவதையுங் கண்டு களிக்க ஆயிரங் கண்கள் தேவைப்படும். (7)

கடலின தகத்தை நோக்கின்
கணக்கிலா மீன்கள் எங்கும்
படையினைப் போலச் செல்லும்,
படமொடு நண்டுஞ் செல்லும்,
உடலெலாம் ஒளிகள் வீச
ஊர்ந்துமே இறுல்கள் செல்லும்,
பெடையொடு சுறுக்கள் காதல்
பேசியே நீந்திச் செல்லும்.

மீன்கள் படையெடுத்தும், நண்டுகள் படமெடுத்தும், இறுல்கள் ஊர்ந்தும், சுறுக்கள் காதல் பேசியுங் கடலிற் செல்லும். (8)

தனதுடல் வளர்க்க வெண்ணித்
தரையினில் நின்றோர் காலை
வனப்புறத் தூண்டில் போட
வலைஞர்கள் வலையை வீசக்
கனதனந் தேட மற்றோர்
கலத்தினிற் தீப மேற்றி
மனமுடன் கடலிற் செல்லும்
மாண்புறு காட்சி யென்னே!

கரையினில் ஒருவன் தூண்டில் போடுவதும், வலைஞர் வலைவீசுவதும், மற்றோர் ஆழ்கடலில் மீன்பிடிக்க ஓடத்திற் செல்வதும், அழகான காட்சிகளாகும். (9)

பட்டுடுத் தணிகள் பூண்ட
பருவமிக் கணங்கே போல
வட்டமாய்ச் சிவந்த மேனி
மயிலினைப் பழித்த சாயல்
எட்டிய திசைக ளெல்லாம்
எழிலொளிக் கரங்கள் கொண்டு
மட்டிலா வனப்பி னோடே
மறைந்தனன் பகலோன் மாதோ!

பட்டுப் புடவையும் ஆபரணங்களும் அணிந்த பருவ மங்கை போல, வட்ட வடிவமும், சிவந்த மேனியும், மயிலை விஞ்சிய அழகுங்கொண்ட சூரியன், திசையெல்லாம் ஒளிக்கரங்களை நீட்டிக் கடலுள் மறைந்தான். (10)

நாளெலாம் நாட்டைச் சுற்றி
நடனமே யாடிச் சென்று,
காளையே போல அந்தக்
கடலினுட் பகலோன் செல்லும்
வேளையை யெண்ணின், உள்ளம்
விம்மித மடைந்து சால
ஏழையும் இன்பங் காண்பான்
என்பதில் ஐயம் உண்டோ ?

சூரியன் நாட்டைச் சுற்றி நடனமாடிக் காளைபோற் கடலில் மறையுங் காட்சி, ஏழைக்கும் இன்பம் அளிக்கும். (11)

* * *

# ஒரு காட்சி

*ஆசிரியப்பா*

காலை தொடக்கங் களங்கமே யின்றி
வர்ணம் பலவுடன் வானந் துலங்கிட,
மென்மையாம் பஞ்சென மேன்மையாய் விளங்கிச்
சிலந்தியின் வலைபோற் சீருற விண்ணின்
கண்ணினைக் கவிந்திடக் கவின்பெறு மேகம்,
இதனினும் மென்மையாய் எங்கணும் எழில்பெறக்
காற்றும் இடையிடை கந்தங் கொணர்ந்து
நறுமணம் ஈந்து நலம்பெற வீசி
அங்கிருந் தசைந்திடும் இலைகளைக்
கொஞ்சிக் கொஞ்சிக் குலாவிடச் செய்தது.

* Michael Drayton எழுதிய A Fine Day என்ற ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# அந்திமாலை

வெண்பா

பாரினது காரிருளைப் பாங்காய்க் கடிந்துவருஞ்
சூரியனும் மேற்கிற் றுலங்கிடவே — கூரிருள்சேர்
அந்தரமுஞ் செம்மை அழகோ டிலங்கிற்றே
செந்தீயைப் போலச் சிவந்து.

உலகின் இருளை அகற்றுஞ் சூரியன், மேற்குத் திசையிற் துலங்கும்பொழுது; சிவந்த அக்கினிச் சுவாலைபோல் வானம் அழகுபெற்றது. (1)

புள்ளினங்கள் சென்றனவே பூங்கா தனைநோக்கித்
தெள்ளியநல் லூணெதுவுந் தின்னாது — வெள்ளைநிற
மங்குல் இருளடைய மாமயில்க ளாடினவே
மங்கக் குயிலின் மனம்.

வானம் இருண்டவுடன், பறவைகள் உண்பதை நிறுத்திப் பூங்காவிற்கு உறங்கச் சென்றன; மயில்கள் ஆடின; குயில்கள் வாடின. (2)

மாக்கள் விரைந்தனவே வண்ண முழைதேடி
ஏக்கமுடன் எங்கும் இருளடையப் — பூக்களெலாம்
நாறினவே யெங்கும் நறிய மணமுடனே
ஈறிலின்பம் பொங்க எமக்கு.

இருள் சூழ்ந்தவுடன், மிருகங்கள் வசிப்பிடங்களை நாடின; மலர்கள் நறுமணம் வீசின. (3)

உழுதுண்டு வாழ்வாரே ஓங்குபவர், மற்றோர்
தொழுதுண்போ ரென்றுபுகழ் சூடிக் — கொழுநுதியாற்
பல்லுயிர்கள் வாழ்வதற்குப் பாங்காய் உழைப்பவரும்
இல்லங்கள் சேர்ந்தார் இனிது.

தொழுது உண்டு வாழாது, உழுது உண்டு வாழும் பெருமை கொண்ட விவசாயிகளும், வேலைகளை முடித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீடுகளுக்குத் திரும்பினர். (4)

நீரினிலே மூழ்கியபின் நீக்கிடவே யொண்முகத்தாற்
பேருற்ற கூந்தலினைப் பெண்ணொருத்தி — சீராய்
வெளிவந்த மென்முகம்போல் வெண்மதியும் விண்ணிற்
களிபெற்று வந்ததே காண்.

நீரில் முழுகிய மங்கை, தனது முகத்தை மறைக்குங் கூந்தலை விலக்கும்பொழுது, அவளுடைய அழகிய முகம் வெளியே காட்சி தருவதுபோல, மதியும் களிப்புடன் வெளிவந்து வானத்திற் காட்சியளித்தது. (5)


மங்களம்

மங்களம்

மங்களம்



கண்ணன் அச்சகம்
நல்லூர்.



இந் நூலாசிரியரின் முன்னைய நூலான
“நல்லூர்க் கந்த”னைப் பற்றி...

This collection of Poems is to be welcomed as a cultural record of Ceylon Tamils.
THE HINDU 9-2-75

நல்லூர்த் திருவிழாவையொட்டித் தெய்வீக மணமும், ஆத்மீகப் பண்பும் ஒருங்கே ஒளிவீசும் இப் பக்திப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ள இந்நூலாசிரியரின் சேவை போற்றுதற்குரியதாகும்.
*தினகரன் 18–8–74*

வைத்தியக் கலாநிதி ஒருவர் கவிதை பாடுகிறார் என்கிறபோது பலரும் வியப்படைகிறார்கள். ஆனால், இந்நூல் மூலம் அவர் ஈழத்துக் கவிஞர் வரிசையில் முன்னணி இடத்தைப் பிடித்துக் கொள்ளப்போகிறார்.
*ஈழநாடு 21–7–74*

“நல்லூர்க் கந்தன்” எனத் தொகுதிக்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், “சைவம்” என்ற வட்டத்தினுள் மாத்திரம் அடங்கி நிற்காது, சகல மதங்கள் மீதும் பாடப்பட்ட கவிதைகளையுந் தொகுதியில் அடக்கியிருப்பது, ஆசிரியரின் பரந்த நோக்கினைப் புலப்படுத்துகின்றது. *வீரகேசரி 1-12-74*

உடல் நலிவு போக்க மருந்துவஞ் செய்யும் டாக்டரான ‘பன்னை மூலை’ சுப்பிரமணியம் அவர்கள், உள்ள நலிவு போக்கும் பக்தி ரசஞ் சொட்டுகின்ற கவிதைகளையுந் தன்னாற் படைத்தளிக்க முடியும் என்பதை, “நல்லூர்க் கந்தன்” எனும் இந் நூலில் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார். *சுதந்திரன் 2-3–75*

“இலங்கை மாதா”வை எளிய தமிழிலே, ஆசிரியர் பாடியுள்ள திறன் பாராட்டுதற்குரியது. *இலங்கை வானொலி 10-12-74*